# பிராயச்சித்தம்

"ஒருவன் நூறு பேரை ஏமாற்றலாம்... ஆனால் தன்னை ஏமாற்றிக் கொள்ள முடியாது!"

தனது கோழிப்பண்ணையில் இருந்து கொண்டு அன்றைய செய்தித்தாளை புரட்டிக் கொண்டிருந்த பார்த்திபனுக்கு மூன்றாம் பக்கத்தில் வந்திருந்த ஒரு குறிப்பிட்ட செய்தி, அவன் நெஞ்சில் முட்டியது.

"ஒரு விபத்தில் கணவனோடு ரூபாய் பத்து லட்சத்தையும் இழந்த பெண் மரணம்! அவரது இருமகள்கள் தற்கொலை முயற்சி!!"

செய்தித்தாளை கசக்கியபடியே மூடிய பார்த்திபன் மிகவே கலங்கி விட்டிருந்தான். எதிரில் சுவற்றில் சமயபுரம் மாரியம்மனின் படம்! ஏனோ அதைப்பார்க்கவே அவனுக்கு அச்சமாக இருந்தது.

வெகு வேகமாக அவனிடம் மாறுதல்கள்.

நீர் பரப்பு தான் ஒரு சிறு கல் விழுந்தாலும் கலங்கிப் போய் சலனப்படும். மனிதமனமும் அப்படித்தான் என்பது அவனைப் பார்த்த மாத்திரத்தில் யாருக்கும் புரிந்துவிடும். அப்போது கச்சிதமாய் தனது டெம்போ டிராவலரில் வந்து இறங்கிய கோவிந்தனுக்கு புரிந்தது.

"என்ன பார்த்தி... ஏன் இப்படி கலங்கிப் போய் நிக்கறே?"

"கலங்கியா.. நானா?"

"உன்னைப் பாத்தா அப்படி தானேப்பா தெரியுது. பண்ணைல கோழிங்க திரும்ப சீக்கு வந்து செத்துப் போச்சா...?"

"சேச்சே... அப்படி எல்லாம் இல்ல கோவிந்தண்ணே.."

"பின்ன ஏன் இப்படி நிக்கறே...?"

கேட்டபடியே கோவிந்தனும் செய்தித்தாளை கையில் எடுத்தான். ஒரு வேகமான ஓட்டம்! அந்த மூன்றாம் பக்கத்து செய்தி! அவன் கண்களிலும் பட்டது. ஆனால்

**இந்திரா சௌந்தர்ராஜன்**



அவனை அது பெரிதாகப் பாதிக்கவில்லை.

வெகு வேகமாக செய்தித்தாளை புரட்டி விட்டு தூக்கிப் போட்டவன் "சரி சரி வாப்பா... பத்தாயிரம் முட்டைங்கள ஒரே ட்ரிப்ல இப்ப கொண்டு கிட்டு போக வந்துருக்கேன்.. அவ்வளவு முட்டைங்களும் ஸ்டாக் இருக்குதானே?"

கோவிந்தன் கேட்டுக் கொண்டே அந்த வீட்டின் பின்புறத்தில் இருக்கும் ஒரு அரை ஏக்கர் நிலப்பரப்புக்குள் ஓட்டுக்கூரை கொண்ட நீண்ட கோழிப்பண்ணைக்குள் நுழைந்தான்.

மொத்தமாய் மூவாயிரம் கோழிகள்!

சராசரியாக ஒரு நாளைக்கு ஐயாயிரம் முட்டைகளை அவைகள் இடுகின்றன.

பெக்...பெக்...பெக்..என்று அவைகளிடம் இளைப்பெடுத்த சப்தம்... உடைத்த கோதுமை ரவை குறுனை, அரிசி, மீன் எலும்புத்தூள் என்று உணவு ஒவ்வொரு கோழிக்கு முன்னாலும் ஒரு இரும்பு பிளேட்டில் கொட்டிக் கிடந்தது.

ஒரு கோழி கூட அதை கொத்தி விழுங்கின மாதிரியே தெரியவில்லை. அவைகளுக்கு சுதந்திரமாக நடந்து திரிந்து உணவை தேடிப் பெறுவதில் தான் சந்தோஷம்!

இப்படி பண்ணைக் கோழியாக அடைந்து கிடப்பதில் உடன்பாடில்லை என்பது அவைகளின் சுறுசுறுப்பற்ற முகத்தைப் பார்க்கும் போதே தெரிந்தது.

அடுக்கடுக்காய் கூண்டுகள்... முட்டைகள் வெளியே உருண்டு வந்து நீண்ட கன்வேயரில் கிடந்தன. கோவிந்தன் பார்த்துக் கொண்டே குடோன் அறையை நோக்கி நடந்தான். அங்கே பிளாஸ்டிக் ரேக்குகளில் ஒரு ரேக்குக்கு நூறு முட்டை என்று அடுக்கப்பட்டிருந்தது.

பண்ணையை அங்கம்மாளும், முனியசாமியும் தான் பார்த்துக் கொள்கிறார்கள். மாசம் இருவருக்கும் மூவாயிரம் சம்பளம். இது போக தினசரி படியாக தலைக்கு இருபது ரூபாய்.. இதில் முனியசாமி பண்ணையை விட்டே எங்கும் போக மாட்டான். சாப்பாடு, தூக்கம் எல்லாம் அங்கேயே.. அங்கம்மாள் காலை ஒன்பதுக்கு வந்தால் இருட்டும் சமயம் திரும்பிச் செல்வாள்.

குடோன் அறையில் முட்டை ரேக்குகளை கவனமாக அடுக்கிக் கொண்டிருந்தனர். இரண்டு பேரும் கோவிந்தன் வரவும் பார்த்து சிரித்தனர்.

"பத்தாயிரம் முட்டைங்க வேணும்... இருக்குல்ல?"

"பத்தென்ன ... பதிமூணாயிரம் இருக்கு. எடுத்துக்கிட்டு போ..." என்றான் முனியசாமி.

"அங்கம்மா... வண்டி வெளியே நிக்குது பார் எடுத்துட்டு போய் அடுக்கு..."

"நான் ஒருத்தியே அடுக்கவா... ஏன் நீ எடுத்துகிட்டு போய்

வைக்க மாட்டியா?''
'' என்னால முடியாது... காலைல இருந்து முப்பது ட்ரிப்பு வரை
அடிச்சிருக்கேன். மேலு காலெல்லாம் ஒரே வலி! இப்பல்லாம் ரோடு
ரோடாவா இருக்குது? புத்து எறும்புங்க மாதிரி எங்க பார் ஜனங்க..
கொக்கு சுடுற குறவன் கூட குர் குர்னு மோட்டார் பைக்குலதான்
போறான். யார் நடந்து போறா? போற போக்க பார்த்தா மனுஷங்க
ளுக்கு நடையே மறந்து போயிடும் போலல்ல தெரியுது...''
கோவிந்தன் தன் வியாக்கணத்தை தொடங்கி விட்டான். அங்கம்
மாள் அவனை முறைத்துக் கொண்டே ரேக்கை தூக்கி தலையில்
வைத்துக் கொண்டு அவனது டெம்போவை நோக்கி நடக்கத் தொடங்
கினாள். முனியசாமியும் தயாரானான்.
'' ஆமா உன் முதலாளி ஏன் ஒரு மாதிரி இருக்கான். எதையோ
பறி கொடுத்த மாதிரி ...?''
'' பாத்தா அப்படி தெரியலியே..''
'' புது கோழிப் பண்ணையை எப்படி நவீனமா செட் அப் பண்ற
துன்னு யோசிச்சிகிட்டிருக்கலாம். இப்பல்லாம் தான் மாட்டுக்கு
பால் கறக்க கூட மெஷின் வந்திருச்சே?''
-இருவரும் பேசிக் கொண்டே முட்டை ரேக்குகளை ஆளுக்கு
ஒன்றாக எடுத்துக் கொண்டு நடந்தனர். ஒட்டு மொத்தமாக 10,000 முட்
டைகளையும் ஏற்றி லெட்ஜர் நோட்டில் கையெழுத்தும் வாங்கிக்
கொண்டு தன் வீட்டு உபயோகத்துக்கென ஒரு குட்டி மூங்கில் பிரம்பு
கூடையில் வைக்கோலை பரத்தி அதில் ஒரு பத்து முட்டைகளையும்
வைத்து எடுத்துக் கொண்ட கோவிந்தன் சொல்லிக் கொள்வதற்காக
திரும்பவும் பார்த்திபன் அருகே சென்ற போதும் பார்த்திபனிடம்
பெரிதாக மாற்றமில்லை. மாறாக கண்களில் கண்ணீர் கூட திரண்டு
விட்டிருந்தது.
'' பார்த்திபா என்னப்பா இது... என்னய்யா ஆச்சு? புதுசா கோழிப்
பண்ணை போடப் போறேன்னு கேள்விப்பட்டேன். - அதுல எதா
வது எதிர்பாராத சிக்கலா?''
'' அதெல்லாம் ஒண்ணுமில்லை கோவிந்தா...நீ புறப்படு இது

நம்ம தபால்காரரோட பொண்ணுக்கா டான்ஸ்ல முதல் பரிசு? ஆச்சரியமா இருக்கே?
இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு? டான்ஸ்ல முத்திரைகள் எல்லாம் பிரமாதமாக் காண்பிச்சாளே!
-ஆர்.ஆர்.உமா, நெல்லை.





வேற விஷயம்...''
'' அது என்னன்னு என்கிட்ட சொல்லக் கூடாதா?''
'' சொல்லக் கூடிய விஷயமே இல்லை.. நீ முட்டைங்கள எடுத்துகிட்டதானே?''
'' ஆஹா... பத்தாயிரம் முட்டை! நோட்டுல கையெழுத்தும் போட்டுட்டேன். பத்தாயிரம் முட்டைக்கு பத்து முட்டையை இலவசமா தந்துருக்கான் உன் வேலைக்காரன். நல்லாவே பழக்கி வெச்சிருக்கே...''
சலித்துக் கொண்டே போய் டெம்போ டிராவலரை கிளப்பினான். அது வித விதமான மொழிக்கு அகப்படாத சப்தங்களை எல்லாம் போட்டுக் கொண்டு புறப்பட்டது!
அதன் பின்புறம் மூடியிருக்கும் டோரில் '' ஏமாறாதே - ஏமாற்றாதே!'' என்னும் வாசகங்கள்.

## 2

''ஒருவன் யாரிடம் இருந்து வேண்டுமானாலும் தப்பி விடலாம். ஆனால் ஒருவன் அவனிடமிருந்தே தப்பிக்க முடியாது!''

இந்த இரண்டு பெண்களையுமே பார்ப்பதற்கு மிக பரிதாபமாக இருந்தது. பெரியவளுக்கு வயது இருபத்தி ஐந்து இருக்கலாம். பெயர் சந்திரா. அடுத்தவளுக்கு இருபது வயது பெயர் இந்திரா. அவர்கள் முன்னால் அவர்களின் தாய், தந்தையர் இருவர் புகைப்படங்களும் மாலையோடு காட்சி தந்து கொண்டிருந்தது.
சுமாரான வீடு - வீட்டைச் சுற்றிலும் மூங்கில் படப்பு வேலி- வேலியை ஒட்டி நான்கைந்து தென்னை மரங்கள்! வேலிகளில் பசலைக் கொடி புதர்போல பரவியிருந்தது. அந்த நாளைய வீடு.... வீட்டை புரோக்கர் மோட்டார் பைக்கில் வந்திருந்த ஒருவருக்கு காட்டிக் கொண்டிருந்தார்.
'' இந்த வீட்டை அடகு வெச்சுத்தான் பத்து லட்ச ரூபா பணத்தை வாங்கிகிட்டு இந்த வீட்டுக்காரர் வெங்கட கிருஷ்ணன் வந்துகிட்டிருந்தாரு. வழியில எவனோ லாரிக்காரன் இவர் வந்த மோட்டார் பைக் மேலே மோதிட்டு வண்டியை நிறுத்தாமலே தப்பி ஓடிட்டான். கைல பத்து லட்ச ரூபா பணத்தோட ரோட்டுல விழுந்து கிடந்த மனுஷன் கிட்டே இருந்து பின்னாலயே வந்த எவனோ பணத்தை அடிச்சிட்டு போயிட்டான். பாவம் உசுரும் போய் பணமும் போய் வீடும் இப்ப அடகுல இருக்குது. இந்த கொடுமையை தாங்கிக்க முடியாம வீட்டு

உயிர் விட்டுருச்சி.
க்காரர் சம்சாரம் மாரடைப்புல உயிர் விட்டுருச்சி.
பாவம் இவங்க பசங்க! அதுகளும் தற்கொலை பண்ணிக்க பார்த்
துச்சுங்க. அக்கம் பக்கம் உள்ளவங்க தடுத்து நிறுத்திட்டோம்.''
-புரோக்கர் விவரித்துக் கொண்டிருந்தார்.
அதைக் கேட்ட அந்த மோட்டார் பைக்காரரிடம் ஒரு பரிதாப
உணர்ச்சி.. உதட்டைச் சுழித்து உச்சு உச்சு என்றார்.
'' சரி இப்ப நான் என்ன பண்ணணும்ங்றீங்க?''
'' நல்ல விலைக்கு இதை நீங்க வாங்கிட்டா அடகுல உள்ளதை
மீட்டு பத்திரத்தை கொடுத்துடுவோம்''
''நல்ல விலைன்னா...?''
'' ஒரு பதினைஞ்சுக்கு...''
'' பதினைஞ்சுன்னா... பதினஞ்சாயிரமா? ''
''இந்த நக்கல் தானே வேண்டாங்கறது..''
'' அடப் போய்யா... கூவிக் கூவி வித்தாலும் பத்து லட்சமே
இதுக்கு ஜாஸ்தி...''
''இப்படி சொன்னா எப்படிங்க... இரண்டு வயசுப் புள்ளைங்க
இருக்குதுங்க. அதுங்களுக்கு கல்யாணம் எல்லாம் நடக்கணும்.
அதுக்காக என்னை என்ன தலைல துண்டு போட்டுக்க சொல்றீயா நீ...
நல்ல புரோக்கருய்யா நீ...''
'' முடிவா எவ்வளவுதான் தருவீங்க..?''
'' பதினொண்ணுன்னா பேசு. இல்லாட்டி விடு..'
மோட்டார் பைக்காரர் பைக்கின் கிக்கிரை உதைத்திட பைக்கும்
புறப்பட்டது.
'' சரி நீங்க போங்க... நான் அந்தப் பொண்ணுங்க கிட்ட பேசிட்டு
வரேன்...''
-புரோக்கர் அந்த வீட்டுக்குள் நுழைந்தான்.
அந்த பெண்களோடு இரண்டு வயதான பெண்களும் இருந்தனர்.
தூரத்து சொந்தம்!
'' அம்மாடி சந்திரா, இந்திரா... படாத பாடு பட்டு ஒரு பார்ட்
டியை பிடிச்சுட்டேன். 11 லட்சம் னா முடிச்சுக்கலாம்கறாரு. என்ன
சொல்றீங்க...?''
-புரோக்கரின் கேள்வி முன் பெரியவள் சந்திரா சரசரவென கண்
ணீர் விட்டாள்.
'' அழுதா எப்படிம்மா...? நீங்க இதுக்கு சம்மதிக்காட்டி வீடு
வட்டி கூட கட்ட முடியாம ஆறு மாசத்துல மூழ்கிப் போயிடும்மா...''
'' அதுக்காக இப்படியாண்ணே கேப்பாங்க. தாயும் போய் தந்தை
யும் போய் குடியிருக்கிற வீடும் போனா நாங்க எங்கண்ணே
போவோம்...''
-இந்த முறை இந்திரா கண்ணீர் விட்டாள்.
'' அந்த அரிச்சந்திரன், சந்திர மதி கூட இந்தப் பொண்ணுங்க
அளவு கஷ்டப்படலை. பாழாய் போன விதி இதுங்கள இப்படி ஆக்



கிடிச்சே..?''
உறவுக்கார பெண் மூக்கைச் சிந்தினாள். அப்போது வாசல் பக்
கம் மோட்டார் பைக் ஒன்று நிற்கும் சப்தம்!
பார்த்திபன் தான் இறங்கி கொண்டிருந்தான்.
வெறித்த பார்வையுடன் தயங்கித் தயங்கி உள்ளேயும் நுழைந்
தான்.
'' யார் நீங்க?''
'' நான் .. நான் என் பேர் பார்த்திபன் இங்க வலையங்குளம் போற
வழியில கோழிப்பண்ணை நடத்துறேன்...''
'' அது சரி தம்பி... இங்க எதுக்கு வந்திருக்கீங்க?''
-புரோக்கர் கேட்டதற்கு பதில் கூறாமல் புகைப்படத்தில் தெரிந்த
அந்த இரண்டு பெண்களின் அப்பாவான வெங்கடகிருஷ்ணனைப்
பார்த்தபடியே அருகே சென்றான்.
'' பெரியவரை உங்களுக்குத் தெரியுமா?''
'' நல்லாத் தெரியும்... நான் இன்னிக்கு ஒரு கோழிப்பண்ணைக்கு
அதிபதியா இருக்கவே ஐயா தான் காரணம். ஐயா இறந்துட்ட விஷ
யத்தை பேப்பர்ல பாத்துதான் தெரிஞ்சிகிட்டேன். அதான் ஓடி வந்
தேன்...''
-அவன் சொல்லச் சொல்ல அந்த இரண்டு பெண்களும் அவனை
வியப்புடன் பார்த்தனர்.
'' உங்கள நாங்க இதுக்கு முந்திப் பார்த்ததே இல்லையே...!'' என்
றனர்.
'' ஐயாவை நான் கடைத் தெருவுலதான் பாப்பேன்.
அவரும் வீட்டுக்கு வாங்க தம்பின்னு பல தடவை கூப்பிட்டிருக்
கிறாரு... ஆனா நான் தான் வந்ததில்ல...''
'' நல்ல வேளை.. இப்பவாவது வந்திங்களே! நாளைக்கு வந்தி
ருந்தா நூறாவது நாளைக்கு வந்த மாதிரி இருந்திருக்கும். அவரு போய்
அந்த அதிர்ச்சியில இரண்டு மாசத்துல அம்மாவும் போய் இன்னி
யோட நாப்பது நாட்களாகப் போகுது...''
அந்த புரோக்கர் சொல்லி முடிக்கவும் முகத்தில் மிக அதிகபட்ச
அதிர்ச்சிகளை காட்டினான் பார்த்திபன்.
''என்ன தம்பி எதுக்கு இந்த அதிர்ச்சி? ''
'' இல்ல நான் இன்னிக்குதான் பேப்பர் பார்த்தேன். ஆனால் அது
பழைய பேப்பர்னு இப்பதான் எனக்குத் தெரியுது. ''
'' சரிம்மா துக்கம் கேக்க வந்துருக்கிற இந்த தம்பிகிட்ட பேசிகிட்
டிருங்க. நான் போய் அந்த மோட்டார் பைக் பார்ட்டி கிட்ட 11 லட்சத்
துக்கு சம்மதம்னு சொல்லிட்டு வந்துடறேன். '' புரோக்கர் திரும்ப
பாய்ண்டுக்கு வந்தான்.
'' இல்ல வேண்டாம்! நாங்க இவ்வளவு மோசமான விலைக்கு
இந்த வீட்டை விக்க விரும்பலை. ''
'' அது சரி வாங்கின கடனுக்கு வட்டி கட்டணுமே கட்டாட்டி

'' ஊரறிய நிச்சயம் நடந்திருக்குல்ல எப்படி மாட்டேன்னு சொல்வாரு? ''

''அப்ப சரி இந்த கல்யாணச் செலவு என்னோடதுன்னு ஏத்துக்குங்க. ''

'' என்ன பெரிய செலவு பத்து லட்ச ரூபா கடனுக்கு யார் பொறுப்பு? அப்புறம் இந்த இளைய பொண்ணை கட்டித்தரணு மில்லை? ''

'' ஓஹோ இது தான் சிக்கலா? ''

''பின்ன நீங்க ஒரு பொண்ணை கட்டப்போறீங்கன்னு வையுங்க, பத்து பவுன் நகை போட்டு பாத்திரம், பண்டத்தோட வரவேண்டிய பொண்ணு அதெல்லாம் எதுவுமில்லாம பத்து லட்ச ரூபா கடனோட வந்தா எத்துக்குவீங்களா? ''

'' சரிங்க நான் இப்ப அவ்வளவுக்கும் ஒரு முடிவு சொல்றேன் கேப்பீங்களா? ''

'' என்னத்த சொல்லப்போறீங்க? ''

'' பத்து லட்ச ரூபா கடனை நான் அடைக்கறேன். இதோ இந்த சின்ன பொண்ணையும் நானே கட்டிக்கறேன். இப்ப யாருக்கும் எந்த வித ஆட்சேபனையும் இல்லையே? ''

பார்த்திபன் பொட்டில் அடித்தது போல அப்படி ஒரு முடிவுக்கு வருவான் என்று புரோக்கரும் சரி அந்த இரண்டு பெண்களுமே கூட எதிர்பார்க்கவில்லை. புரோக்கர் முதலில் வாயைப் பிளந்தாலும் '' தம்பி பேர் என்ன சொன்னீங்க? '' என்று சற்று கிண்டலாக கேட்டான்.

'' பார்த்திபன் ''

'' கோழிப்பண்ணை வச்சிருக்கேன்னு சொன்னீங்கல்ல? ''

'' ஆமாம் மாசம் இருபதுல இருந்து இருபத்தஞ்சு லட்ச ரூபாய் கோழி, முட்டைன்னு வியாபாரம் பண்றேன். ''

'' அதுசரி இவ்வளவு பெரிய வியாபாரியான உங்களுக்கு இந்த குடும்பம் மேலே மட்டும் ஏன் இவ்வளவு அக்கறை? ''

'' அதான் சொன்னேனே பெரியவர் வெங்கடகிருஷ்ணன் ஐயாவுக்கு நான் ரொம்பவே கடமைப்பட்டவன்னு. ''

பெரியவருக்கு நிறைய உறவுக்காரவங்க இருக்காங்க. அதுல கல்யாண வயசுல பயலுகளும் இருக்காங்க. அவங்களுக்கு இல்லாத அக்கறை உங்களுக்கு வந்தது தான் ஆச்சரியமா இருக்கு? ''

'' ஆச்சரியமா இருக்கா, இல்லை சந்தேகமா இருக்கா? ''

'' ரெண்டும் தான். நீங்க என்ன சாதி என்னகுலம்ன்னு எதுவும் தெரியாது. திடுதிப்புன்னு வந்தீங்க, மாப்ளை ஆயிக்கறேன்னு சொல்றீங்க. நம்ப முடியலையே எங்கேயோ இடிக்குதே...''

புரோக்கரின் குரலில் அப்படியே ராகம் மாறிப் போனது. அந்த இரண்டு பெண்களும் கூட ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு மருள மருள நின்றனர்.



# 3

நாம் எங்கே சென்றாலும் நம் நிழல் நம்மோடு தான் வரும்

புரோக்கரின் குரலில் சந்தேகம் தொனித்த அந்த நொடியில் அந்த வீட்டு வாசலில் போலீஸ் ஜீப்பும் வந்து நின்றது. அதில் இருந்து சப் இன்ஸ்பெக்டர் ருத்ரா இறங்கி வீட்டினுள் நுழைந்தார். அவரை பெரியவள் சந்திரா ஓடிச் சென்று வரவேற்றாள்.

'' வாங்க அங்க்கிள் வாங்க, உட்காருங்க. '' அந்த வீட்டில் இருந்த மடக்கி வைக்கப்பட்டிருந்த இரும்பு நாற்காலியை வேகமாக எடுத்து வந்து போட்டாள் இந்திரா. அவரும் அமர்ந்த படியே புரோக்கரை பார்க்க, புரோக்கர் அசடு வழியத் தொடங்கினான்.

'' என்னய்யா உனக்கு இப்ப இங்க என்ன வேலை? ''

'' ஒண்ணுமில்லையா நம்ம வீட்டை ஒருத்தர் கேட்டுவந்தாரு. அதான் பாப்பாங்க கிட்ட பேசலாம்னு வந்தேன். ''

'' உன் கமிஷனுக்காக நீ பாகிஸ்தான் தீவிரவாதிக்கு கூட வீட்டை காட்டி கொடுப்பியே. ''

'' ஐயோ அப்படி எல்லாம் இடையாதுங்க, நான் பெரியவருக்கு ரொம்பவே கடமைப்பட்டவன். ''

'' இப்படிச் சொல்லியே ஏய்க்கலாம்னு பாக்கற அப்படித் தானே? ''

'' சத்யமா இல்லையா. நீங்க சொல்றது இதோ இந்த தம்பிக்கு வேணா பொருந்தும். வந்து ஒரு கால் மணி நேரம் கூட ஆகலைங்க. அதுக்குள்ள வீட்டுக் கடனை நான் அடைச்சுடறேன், சின்ன பொண்ணையும் கட்டிக்கிறேன்னு பட்டாசா கொளுத்தி விட்டு கிட்டு இருக்காரு. ''

புரோக்கர் வசமாக அவரிடம் பார்த்திபனை மாட்டி விடவும், அவனும் எந்த பதட்டமும் இன்றி அவரைப் பார்த்தான்.

'' யாருய்யா நீ? ''

'' சார் என் பேர் பார்த்திபன். வலையங்குளத்துல கோழிப் பண்ணை நடத்திக்கிட்டு இருக்கேன். ''

'' வளையங்குளத்துல கோழிப்பண்ணையா... ரோட்டு மேல கொஞ்சம் உள்ளடங்கி இருக்குதே அந்த பண்ணையா? ''

'' ஆமாங்க. ''

'' இங்கே என்ன வேலை உனக்கு? இந்த தரகன் சொல்றதெல்லாம் உண்மையா? ''

'' நான் பெரியவர் வெங்கடகிருஷ்ணனுக்கு ரொம்ப கடமைப் பட்டவங்க. அந்த மதிப்புல தான் இன்னிக்கு இங்க துக்கம் விசாரிக்க வந்தேன். அப்ப இந்த குடும்பச் சிக்கலை எல்லாம் இந்த புரோக்கர்

தான் பெருசா பட்டியல் போட்டுக்கிட்டிருந்தாரு. எனக்கும் மனசு கேட்காமதான் கல்யாணப்பேச்சை எடுத்தேன். ''

மிக சகஜமாக பார்த்திபன் பேசியது ருத்ரா என்கிற அந்த சப் இன்ஸ்பெக்டருக்கும் மிகப் பிடித்து விட்டது.

'' நீ நிஜமாலுமே பேசறியா இல்ல உணர்ச்சிவசப்பட்டு தப்பா முடிவெடுத்திட்டியா? ''

'' சத்யமா இல்லைங்க. நான் என் விருப்பத்தை தான் சொன்னேங்க. என்னைப் பிடிச்சிருந்து இஷ்டமும் இருந்தா தான் கல்யாணம் பண்ணிக்கிறேன். இல்லாட்டி போய்கிட்டே இருக்கேங்க. ''

அவனது தெளிவான திடமான பதில் ருத்ராவுக்கும் மிகப் பிடித்து விட்டது.

'' சரி நீ இப்ப புறப்படு. நான் அப்புறமா உன்னை பண்ணைல வந்துபார்க்கறேன். ''

'' சரிங்க, நான் வரேங்க. ''

பார்த்திபன் புறப்பட்டான்.

'' என்னா தரகு புறப்படு உனக்கு வேற தனியா சொல்லணுமா? ''

'' நல்லதுங்க பாத்துங்க பொறுப்பா எடுத்துச் சொல்ல யாரும் இல்லாத பொண்ணுங்க. ''

'' நீ புறப்படு எங்களுக்கு எல்லாம் தெரியும். பெரியவர் வெங்கடகிருஷ்ணனுக்கு நானும் வேண்டப்பட்டவன் தான். உனக்காவது பெரியவரைத் தெரியும். எனக்கு அவர் பால்ய சினேகிதர். ஞாபகம் இருக்கட்டும்.''

ருத்ராவின் அதட்டலான பேச்சைத் தொடர்ந்து அந்த புரோக்கர் அரைமனதாக புறப்பட்டான். அவரும் அந்த பெண்களிடம் ஊன்ற ஆரம்பித்தார்.

'' என்னம்மா வந்துட்டு போன பையன பத்தி என்ன நினைக்கறீங்க? ''



பத்திரிகை ஆசிரியர் வீட்டுலே பெண் பார்க்கப்போனது தப்பாப்போச்சு!

ஏன்?

அவருக்கு நிறைய பெண் இருக்காம். அதனாலே ஒரு பெண்ணைத் திருமணம் செஞ்சிக்கிட்டா இன்னொரு பெண்ணையும் இலவசமாத்தருவாராம்!

-என்.குணசீலன்,
பட்டுக்கோட்டை.



'' எங்களுக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை அங்கிள். ''

'' பையன் நல்ல குணமுள்ளவனா இருந்தா உங்களுக்கு ஆட்சேபனை இல்லையே? ''

'' அங்க்கிள் நாங்க ரொம்ப துரதிஷ்டசாலிங்க, எங்களுக்கு ஒரே நேரத்துல விடியல் வருதுன்னா நம்ப முடியலை. பயமா இருக்கு அங்க்கிள். ''

சந்திரா விசும்பியபடியே அழத் தொடங்கினாள்.

'' அட அழாதம்மா. தைரியமா கூட்டிக்கழிச்சு கணக்குப் போட்டு பாக்க வேண்டிய நேரத்துல அழுவறது தப்பு. உணர்ச்சிவசப்பட்டா கணக்கு தப்பா போயிடும். ''

'' சரிங்க அங்கிள். ஒரு ரெண்டு நாள் அவகாசம் கொடுங்க. நாங்க யோசிக்கிறோம். ''

'' ரெண்டு நாள் என்ன ரெண்டு நாள்... நிறையவே டைம் எடுத்துக்கங்க, இது ஒண்ணும் இரண்டு நாள்ல முடிவு செய்யற விஷயம் இல்லை. நானும் இந்த பையன பத்தி நாலா பக்கமும் விசாரிக்கிறேன். ''

'' அங்க்கிள் அப்பாவுக்கு ஆக்சிடென்ட் ஆனதை பத்தி ஏதாவது தகவல் உண்டா? ''

'' இப்ப தான் நீ கேக்க வேண்டிய கேள்வியையே கேட்டுருக்கே. அன்னிக்கு உங்கப்பா பத்து லட்ச ரூபா கடன் பணத்தோட மோட்டார் பைக்கில இருந்து அந்த கூட்டுறவு சொசைட்டிய விட்டு அஞ்சு மணிக்கு புறப்பட்டிருக்கார். இருட்டறதுக்குள்ள வீட்டுக்கு போய் சேரணும்னு சொல்லிக்கிட்டே புறப்பட்டுருக்கார். சொசைட்டி கிளார்க் குமாரசாமிங் கறவர் கூட பாத்து போங்கன்னே. கைல வேற பணம் இருக்குதுன்னு எச்சரிக்கை பண்ணியிருக்கார். ''

மெயின் ரோடு வழியா தான் வந்திருக்கார். ஆனா வர்ற வழியில எங்க வீட்டு குழாய்ல நல்ல தண்ணி வந்து பதினைஞ்சு நாளாகுது. அதிகாரிங்க யாரும் நடவடிக்கை எடுக்கலேன்னு அந்த பகுதி மக்கள் நடுரோட்டுல உட்கார்ந்து மறியல் பண்ணியிருக்காங்க. அதனால சுத்தமா போக்குவரத்து ஸ்தம்பிச்சு போச்சு. இருந்தாலும் உங்கப்பா மோட்டார்பைக்கை மட்டும் போகட்டும்னு விட்டிருக்காங்க. அப்ப யாரோ தெரிஞ்ச ஒருத்தர் உங்க அப்பாகிட்ட லிப்ட் கேட்டு பின்னால உக்காந்தும் போயிருக்காரு. அப்படி இரண்டு பேருமா போன சமயத்துல தான் புளிய மரத்துக்கிட்ட விபத்து நடந்திருக்கு. ஒரு அதிர்ச்சியான விஷயம் என்னன்னா அப்ப ரோட்ல போக்குவரத்தே இல்லை. போக்குவரத்து இல்லாத சாலையில உங்கப்பா மேலே எந்த வண்டியும் மோதலங்கறது தான் உண்மை. ''

சப் இன்ஸ்பெக்டர் ருத்ராவின் நீண்ட விளக்கத்தின் முடிவு அந்தப் பெண்கள் இருவரையும் ஒரு உலுக்கு உலுக்கியது.

''அங்க்கிள் அப்படின்னா...?''

''உங்கப்பாவே வேகமா வண்டிய ஓட்டிகிட்டு போய் மரத்துல

மோதி தூக்கி அடிக்கப்பட்டு இறந்திருக்கலாம். கூட வந்த நபர் பத்து லட்ச ரூபா பணத்தோட நழுவியிருக்கலாம்.''

''அப்பா எப்பவுமே வேகமால்லாம் ஓட்டமாட்டாரு.. நான் அவர் கூட பல தடவை போயிருக்கேன். நாப்பது கிலோ மீட்டர் ஸ்பீடையே அவர் பெருசா நினைப்பாரு அங்க்கிள்..''

''தெரியும்மா... வெங்கடகிருஷ்ணனை எனக்கு தெரியாதா? நான் என்னோட ஒரு யூகத்தை சொன்னேன். இந்த மாதிரி பல விதமா யூகிக்க இடம் இருக்கு. ஆக்சிடென்ட் ஆன பைக்லயும் பெரிய நஷ்டங்கள் இல்லை. அப்பாவுக்கும் தலைல தான் பலமா அடிபட்டு காது மூக்கு வழியா ரத்தம் போய் தான் உயிர் போயிருக்கு..''

''அப்ப அப்பா கூட லிப்ட் கேட்டுப்போன நபர் யாரு அங்க்கிள்...?''

''அந்த நபரைத்தான் டிரேஸ் பண்ணிகிட்டு இருக்கேன். அந்த மறியல் கூட்டத்துல இருக்கறவங்களுக்கு சரியா சொல்லத் தெரியல. ஒண்ணு மட்டும் உறுதி! லிப்ட் கேட்டுப்போன நபர் பிடிபட்டா எல்லா உண்மையும் உடனே வெளிவந்துடும். அந்த நபர் ஒரு ஆண். நாப்பது வயசுக்கு மேல தான்கறது தான் இப்ப தெரிய வந்துருக்கிற விஷயம். உங்கப்பாவுக்கு தெரிஞ்சவங்க பட்டியலை போட்டு அதுல யார் யார் இப்ப எப்படி இருக்காங்கன்னும் பாத்துகிட்டு வரேன். பத்துலட்ச ரூபா பணத்தை இவங்க பயன்படுத்தும் போது எப்படியும் தெரிஞ்சிடும்.

ஒரு விபத்துல பணம் திருடுறவன் நிச்சயம் பெரிய கிரிமினலா தான் இருப்பான். ஆகையால் உடனே பணத்தை வெளிய எடுக்க மாட்டான். போலீஸ் விசாரணை எல்லாம் முடிஞ்சிடிச்சான்னு பாத்துட்டு அப்புறமா பணத்தை வெளிய எடுக்கலாம். நானும் எல்லா விசாரணையும் முடிஞ்சிடிச்சு உங்கப்பாவோட சாவு ஒரு விபத்துதான்னு பைலை குளோஸ் பண்ணப்போறேன். சம்மந்தப்பட்ட நபருக்கு நான் உங்கப்பாவோட பால்ய சினேகிதன்னும் தெரிஞ்சிருக்கலாம். ஆகையால நான் என்ன பண்றேன்னு பாத்துகிட்டே இருக்கலாம். நான் பைலை குளோஸ் பண்ணிட்டேன்னு தெரிஞ்சாதான் அவன் பணத்தோட வெளிய வருவான். அவன் அப்படி வெளிய வரணும்கறதுக்காகவே நான் பைலை இன்னிக்கு குளோஸ் பண்ணப்போறேன்.

ஒண்ணு மட்டும் உறுதிம்மா.... அவன் என்கிட்ட இருந்து மட்டும் தப்பிக்க முடியாது.

ருத்ராவின் விளக்கம் இருவரையும் கலங்க வைத்திருந்தது. கண்களில் திரும்பவும் கண்ணீர். ''அழுவாதீங்க... உங்கள பார்த்து கண்ணீர் விடாதீங்கன்னு சொல்றது சுலபம்.. அதே சமயம் உங்களோட இப்போதைய நிலை எவ்வளவு பரிதாபகரமானதுன்னு எனக்கு நல்லா தெரியுது.

ஒரு மனுஷனுக்கு ஒரு சமயத்துல ஒரு துன்பம் வந்தாலே தாங்கிக்க முடியாது. உங்களுக்கோ பெத்தவங்க போய், சொத்தும் போய்,



நடக்க இருந்த கல்யாணமும் நின்னு போய் நீங்க ஒரு மூணுமாசத்துல அனாதைகளா ஆகிட்டீங்க. ஆனா நான் இருக்கற வரை இனி உங்களை ஒரு துன்பம் நெருங்க விடமாட்டேன். வழில நாடார் கடைல மளிகை சாமான்லாம் போடச் சொல்லியிருக்கேன். அந்த கடன் வட்டியை பத்தியும் நீங்க கவலைப்படவேண்டாம். அதை நான் பாத்துக்கறேன்.

எல்லாம் கொஞ்சநாள் தாம்மா.. நிச்சயம் அந்தபணம் திரும்ப கிடைச்சு உங்க கல்யாணமும் நல்ல விதமா நடக்கும். இதையெல்லாம் சொல்லிட்டு போகத்தான் வந்தேன். தைரியமா இருங்க.. நான் வரேன்!''

ருத்ரா எழுந்து கொண்டார். அவர்கள் இருவரும் வாசல்வரை சென்று வழியனுப்பிவிட்டு திரும்பி வந்தனர்.

பெரியவள் சந்திரா இளையவளைப் பார்த்தாள்.

அவளும் பேசத் தொடங்கினாள்.

''அக்கா ஒரு பக்கம் அந்த பார்த்திபன் இன்னொரு பக்கம் அங்க்கிள்... இரண்டு பேருமே நம்பிக்கை தர்ராங்க இல்ல?''

''எனக்கும் அப்படிதான் தோணுது இந்திரா... அதே சமயம் அந்த பார்த்திபன் விஷயத்துல நாம ஒரு நல்ல முடிவுக்கும் வந்தாகணும்.''

''நல்ல முடிவுன்னா...?''

''எது சரியான முடிவோ அது தான் இந்திரா நல்ல முடிவு...''

''அந்த புரோக்கரை பார்த்தீங்களா... நம்ம கிட்ட இருந்து வீட்டை பிடுங்குறதுலயே குறியா இருக்கான்...''

''அவருக்கு அது தொழில். ஒவ்வொருத்தரும் அவங்கவங்க வாழற வழியைத் தான் பாக்கறாங்க... நாமளும் நாம வாழ வழியை பாப்போம்...''

''நாம எப்பக்கா மாட்டேன்னு சொன்னோம்...? வாழ்க்கை தானே நமக்கு வசப்படாம கண்ணா மூச்சி காட்டிகிட்டு இருக்குது. நாம யாருக்கு என்ன கெடுதல் செஞ்சோம்? பக்க பலமா இருந்து பாதுகாக்க ஒரு அண்ணன், தம்பி கூட இல்லை. அதிகபட்சம் நூறு நாட்கள்! இந்த நூறு நாள்ள அப்பா, அம்மா, பணம், வீடு'ன்னு எல்லாமே கையை விட்டு போயிடிச்சே?''

''அதுக்கு பேர் தான் இந்திரா விதி.... அது விளையாடத் தொடங்கிட்டா ஒரு மனுஷனோட வாழ்க்கைங்கறது சுனாமி வந்த கடற்கரை மாதிரியாயிடும்கறதுக்கு நாமளே ஒரு உதாரணம்...''

''பெரிய விதி.... இதை எழுதுனது யாருக்கா...?''

''நம்மை படைச்ச கடவுள் தான்.. வேற யாரால இதை எழுத முடியும்?''

''இந்த கடவுளுக்கு நம்ம மேல என்னக்கா அப்படி ஒரு கோபம்.. இவ்வளவு மோசமா எழுதியிருக்காரு...?''

''தெரியலியேம்மா.. எங்க தேடி வந்து கேள்வி கேட்டுடுவோமோன்னு பயந்து கிட்டு தான் கல்லாவே இருக்காரோ என்

...?''

''அவர் எப்படி வேணா இருந்துட்டு போகட்டும். ஆனா இனி நான் அவரை கும்பிட மாட்டேங்கா...''

''நீ இப்ப தான் இந்த முடிவுக்கு வந்துருக்கே.. ஆனா நான் அம்மா நம்மை விட்டு போன அன்னிக்கே அந்த முடிவுக்கு வந்துட்டேன்.''

''சரிக்கா... நாம இனி அடுத்து என்ன பண்ணப்போறோம்?''

''பொறுமையா இரு.. இப்போதைக்கு எனக்கு என் வாழ்க்கை கூட பெருசு இல்ல. நம்ம இரண்டு பேர்ல நீயாவது நல்லா இருந்தா அதுவே எனக்கு போதும்.. அதனால..''

''நிறுத்துக்கா.. எதுக்கு இப்படி பிரிச்சு பேசுறே..?''

''பிரிச்சு எங்க பேசினேன். நீ என் கூட பிறந்த தங்கச்சி. நீ நல்லா இருக்கணும்னு நினைச்சுதான் பேசிகிட்டு இருக்கேன்.''

''அப்படி தெரியல.. நீயாவது நல்லா இருந்தா அதுவே எனக்கு போதும்னா என்ன அர்த்தம்?''

''அந்த பார்த்திபன் நல்ல பையனா இருந்தா அவனை நீ கட்டிக்கோ... எனக்கு கல்யாணம் ஆகணும்னா தான் இந்த 10 லட்ச ரூபா கடன் மாப்பிளை வீட்டை தடுக்குதே.... ஆனா இந்த பார்த்திபன் கடனையும் அடைச்சு உன்னையும் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்றது எவ்வளவு பெரிய விஷயம்?''

''அப்படிப் பார்த்தா உன் கல்யாணமும் நடந்துடும்னு தானே அர்த்தம்?''

''இல்ல இந்திரா... பார்த்திபன் யார் எனக்கான கடனை அடைக்கறதுக்கு...? உன்னை கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னதே பெருசு. அது போதும்! நீ அவனை கல்யாணம் பண்ணிகிட்டு நல்லா இரு. நான் இந்த பத்துலட்ச ரூபா கடனை ஏதாவது வேலைக்கு போய் அடைக்கற வழியை பாக்கறேன். என் வாழ்க்கை அதுக்கே சரியாபோனாலும் போயிடும்...''

சந்திரா பதிலோடு விழியோரம் ததும்பிய கண்ணீரை சுண்டி விட்டுக் கொண்டாள்.

''ஓஹோ.. உனக்கென்ன பெரிய தியாகின்னு நினைப்பா?''

''இப்படி எல்லாம் நடந்துக்கறதுக்கு பேர் தியாகின்னு உனக்கு யார் சொன்னது....? இது கூட ஒரு சுயநலம் தான்டி. கொஞ்சம் புத்தி சாலித்தனமான சுயநலம்னு வேணும்னா சொல்லலாம். இப்படி நடந்துக்கிட்டா தான் இரண்டு பேர்ல ஒருத்தராவது நல்லா இருக்க முடியும்....''

''சரி... நீ சொல்ற அந்த ஒருத்தரா நான் இருந்துட்டு போறேன்.. உனக்கு பார்த்து வெச்சிருக்கிற மாப்ளையை கட்டிகிட்டு நீ நல்லா இருந்துட்டு போ...''

''எனக்கான மாப்ளை தான் வீட்டுக்கடனை பார்த்து ஒதுங்கி நிக்கறாரே...?''

''நான் மாப்ளை வீட்டுக்காரங்க கிட்ட பேசி பாக்கறேன்.



கடனை நான் சம்பாதிச்சு அடைக்கறேன்.. அக்காவை தயவு செய்து ஏத்துக்குங்கன்னு சொல்றேன்...''

''சிரிப்பாங்க... மூத்தவளுக்கு எவ்வளவு சுயநலம்பார்னு ஊரும் தப்பா பேசும்.''

''இல்லக்கா.. யார் என்ன சொன்னாலும் சரி. வாழ்ந்தா ரெண்டு பேரும் வாழ்வோம். இல்ல அம்மா, அப்பா போன வழி நாமளும் சாவோம்.''

இந்திரா காட்டிய அழுத்தம் சந்திராவையும் அமைதிப்படுத்தியது. பெருமூச்சு விடச் செய்தது. தோளில் கை போட்டு ''சரி இந்த விஷயம் பத்தி நாம அப்புறம் பேசுவோம். இப்ப நீ போய் வரப்போற உன்னோட செமஸ்டர் எக்ஸாமுக்கு படி...'' என்றாள்.

''ஆமா படிச்சு பட்டம் வாங்கி கொடிகட்டித்தான் பறக்கப் போறேன்''- விரக்தியோடு சொல்லிக் கொண்டே விலகிப்போனாள் இந்திரா.

சந்திராவிடம் பதிலில்லை!

## 4

'நினைவுகளே செயல்களாகின்றன! எனவே நல்லதையே நினைத்தால் அவசியம்...'

கோழிப்பண்ணை!

டெம்ப்போ டிராவலர் சப்தம் கேட்டது- கோவிந்தன் இறங்கிக் கொண்டிருந்தான். கூடவே சில தானிய மூட்டைகள் அவ்வளவும் கோழித்தீவனம். முனியசாமி அவைகளை தோளில் சுமந்து கொண்டு குடோன் பக்கமாக சென்றான். கோவிந்தன் ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டான். அங்கம்மாள் கோழி கழிவுகளை ஒரு பிளாஸ்டிக் கூடையில் சேமித்து உரக்குழி ஒன்றில் கொட்டிக் கொண்டிருந்தாள்.

'ஸ்டேஷன்ல எதுக்கு உண்டியல்?'

'மாமூலை காணிக்கையாகவும் உண்டியலில் போட்டுடலாமாம்!'

'-எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.



கோவிந்தனை பார்க்கவும் ''இன்னிக்கு காலைலயே வந்திட்டையா?'' என்று ஆரம்பித்தாள்.

''நீ ஏன் அலுத்துக்கறே... உன்னை நான் ஏதாவது பண்றேனா?'' என்று கேட்டான். புகையை கக்கிய படியே பார்த்திபனை தேடிக் கொண்டு போனான்.

அந்த பண்ணையில் பார்த்திபனுக்கென்று ஒரு தனியறை. அதற்கென ஒரு ஸ்ப்லிட் ஏ.சி.யும் பொருத்தப்பட்டிருந்தது. முகப்பு கதவில் ஒரு சதுரத்துக்கு கண்ணாடி பொருத்தப்பட்டு அதன் வழியாக பார்த்தால் உள்ளே பார்த்திபன் இருப்பதும் தெரியும். அப்போதும் இருந்தான்.

சின்னதாய் ஒரு கம்ப்யூட்டர்!

அதில் ஏதாவது செய்து கொண்டிருப்பான். சில சமயங்களில் முனியசாமிக்கும், அங்கம்மாளுக்கும் அதில் பழைய எம்.ஜி.ஆர். பாடல்களை போட்டு காட்டுவான். குறிப்பாக முனியசாமி சோர்வாக இருப்பது தெரிந்தால் அதோ அந்த பறவைபோல பாட்டை கிளிக் செய்ய அதை திரையில் ஓட ஆரம்பித்து முனியசாமியிடமும் உற்சாகம் தொற்றிக் கொண்டு விடும். அங்கம்மாளுக்கு மலர்ந்தும் மலராத பாசமலர் பாட்டுத்தான் மிக இஷ்டம்!

அதை பார்க்கும் போது ஒவ்வொரு முறையும் அதற்கு முன் அழுதது போலவே அழுவாள். அண்ணன், தங்கை பாசம் என்பது அவள் வரையில் அமுதம் போன்ற ஒரு விஷயம்.

''தம்பி.. இப்படி எல்லாம் வீட்டுக்குள்ளாற நினைச்சப்பல்லாம் வாத்தியார் படத்தை பாக்க முடியும்னு நான் கனவு கூட கண்டதில்ல தம்பி.. எங்க ஊர் சாந்தி தியேட்டர்ல வரிசைல நின்று மிதி வாங்கி அடிவாங்கித் தான் டிக்கெட் எடுத்து படம் பாப்போம். அதுலயும் எப்பப்பார் எனக்கு முன்னால தென்னமரம் மாதிரி வளத்தியான ஆளா வந்து உக்காந்துக்குவாங்க. நான் வேற வழி இல்லாம கதவு கிட்ட போய் நின்னு கிட்டே படம் பார்ப்பேன். இப்ப என்னடான்னா ஊத்தப்பம் தண்டிக்கு ஒரு சி.டி. அதுல சினிமா. நினைச்சப்பல்லாம் பாக்க முடியுது. ஆனா அப்ப பாத்த சந்தோஷமில்ல தம்பி.

இப்ப என்னத்த படம் எடுக்கறாங்க? ஒரு பாட்டு கூட வாயில நுழைய மாட்டேங்குது. எல்லா படத்துலயும் ரெண்டு குண்டனுங்க கோணங்கி மாதிரி கைய காலை ஆட்டிகிட்டு பேசறாங்க. அது தமிழா இங்கிலீஷா இல்ல அரேபியா பாஷையா, ஒரு எழவும் புரியலை. நான்லாம் படம் எடுத்தா முதல்ல அந்த குண்டனுங்கள சுட்டு கொன்னுட்டுதான் ஷூட்டிங்கே வைப்பேன்.''

முனியசாமி இப்படி சொல்லும் போது பார்த்திபன் மனம் விட்டு சிரிப்பான். பண்ணைக்குள் இருந்தாலே கலகலவென்றும் இருப்பான். சுயமாக உழைத்து முன்னேறிக் கொண்டிருக்கும் பூரிப்பு அவனைப் பார்த்தாலே தெரியும்.

கோவிந்தன் வந்து எட்டிப்பார்த்த போது அதெல்லாமே அவனை



விட்டு விலகி அவன் முகத்தில் தீவிர சிந்தனை. கோவிந்தனும் கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். அப்போது தான் ஒரு மூலையில் பார்த்திபன் தங்கை கனகாவை பார்த்தான். அறைக்குள் நாற்காலி இருக்கும் தரையில் ஒரு மூலையில் குத்தவைத்து உட்கார்ந்திருந்தாள். முகத்தில் அவள் அழுதிருக்கிறாள் என்பதற்கான தடயங்கள் தெரிந்தன.

பார்த்திபன் மிக இறுக்கமாக இருந்தான்.

கம்ப்யூட்டர் திரையில் ஒரு பந்து உருண்ட நிலையில் செவ்வகம், சதுரம், முக்கோணம் என்று எல்லா வடிவங்களையும் எடுத்துக் கொண்டிருந்தது.

''என்ன பார்த்திபா.. ஏன் ஒரு மாதிரி இருக்கே?'' கோவிந்தன் ஆரம்பித்தான்.

''அண்ணே.. எதுக்கு வந்துருக்கீங்க இப்ப.. அதான் முட்டை இப்ப இல்லன்னு நீங்க போன் பண்ணப்பவே சொன்னேன்?''

''நிறுத்துப்பா.. முட்டை இருந்தாதான் நான் உன்னை பாக்க வரணுமா? வேற எதுக்கும் வரக்கூடாதோ?''

''வழவழன்னு பேச இப்ப எனக்கு நேரமில்லண்ணே. வந்த விசயத்தை சொல்லுங்கண்ணே...''

''என்னத்த சொல்ல.. வர்ற வெள்ளிக்கிழமை நிச்சயதார்த்தம்னு ஊர் பூரா சொல்லி வெச்சிருக்கே... இப்ப கல்யாணம் நடக்கப்போறதில்ல.. யாரும் வந்துடாதீங்கன்னு எல்லாருக்கும் போன் போட்டு சொல்லிகிட்டு இருக்கியாமுல்ல?''

''ஆமாண்ணே.. உங்களுக்கும் சொல்லணுமில்ல? சாரிண்ணே மறந்துட்டேன்''

''என்னா சாரி பூரி... ரெண்டு நாளா நீ கர்புர்ருன்னு காட்டுப்பன்னி மாதிரி திரிஞ்சப்பவே நான் ஏதோ விவகாரம்னு சந்தேகப்பட்டேன். அது சரியாப் போச்சு. ஏம்பா... ஏன் இப்படி நிச்சயம் பண்ணப்போற ஒரு நல்ல விஷயத்தை தடுத்து நிறுத்தறே. இவ்வளவு தூரம் வந்ததுக்கு பிறகு நிச்சயம் வேண்டாம்னா என்னப்பா அர்த்தம்?''

''அண்ணே.. உங்ககிட்ட விலா வாரியா பேச எனக்கு இப்ப நேரமில்ல. மனசும் இல்லை. நான் எடுத்த முடிவு எடுத்தது தான். எங்க சொந்தக்காரங்களுக்கெல்லாம் சொல்லிட்டேன். இதோ இது கூட உங்கள மாதிரி தான் கேள்வி கேட்டுகிட்டு அழுதுகிட்டிருக்கு. ஒண்ணு மட்டும் உறுதிண்ணே... நான் நிச்சயம் கல்யாணம் கட்டிக்குவேன். ஆனா இப்ப இல்லை.''

''இப்ப இந்த இடம் வேண்டாம்னா என்ன அர்த்தம்?''

''ஆயிரம் காரணம் இருக்குண்ணே... எல்லாத்தையும் நான் இப்ப பேசற நிலையில இல்லை.''

''ஏம்பா.. பொண்ணு வீட்ல பெருசா ஏதாவது எதிர்பார்க்கறியா அதான் அவங்க அஞ்சுலட்ச ரூபாயை உனக்கு சீரா கொடுக்கறாங்களேப்பா...?''

''சத்யமா நான் எதையும் எதிர்பார்த்து இப்படி நடந்துக்கல. என் தொழில்ல நான்இன்னும் நிறைய சாதிக்க வேண்டியிருக்கு.''

''அதை கல்யாணம் பண்ணிகிட்டு செய்ய முடியாதா? பொண்டாட்டி துணையோட சந்தோசமா செய்யேன்...''

''உங்களுக்கு சொன்னா புரியாதுண்ணே.. நீங்க முதல்ல இடத்தை காலி பண்ணுங்க. விசயத்தை பெருசுபடுத்தி எனக்கு நிச்சயம் பண்ணப்போற பொண்ணுக்கு கெட்டப்பேரை உருவாக்கிடாதீங்க...''

''அடேங்கப்பா.. அந்த பொண்ண தான் வேண்டாம்னுட்டியே அப்புறம் என்ன அதுமேல அக்கறை..?''

''வேண்டாம்னு சொல்லலை. அதுக்கு நான் தகுதியில்லேன்னு நினைக்கறேன். உங்களுக்கு சொன்னா புரியாது. இதோ இந்த கழுதை கிட்டயும் இதையேதான் சொல்லிகிட்டு இருக்கேன். இதுக்கு மேல என் வாயைப் புடுங்காம நல்ல நேரத்துல புறப்படுங்க...''

பார்த்திபன் பேச்சோடு அறையின் கதவைக் காட்டினான். கோவிந்தன் முறைத்துக் கொண்டே புறப்பட்டான். அவன் தங்கை கனகாவோ கண்களை கசக்கிக் கொண்டேயிருந்தாள்.

வெளியே வந்தான்

எதிரில் முனியசாமி...

"ஏ முனியா.. என்னய்யா ஆச்சு உன் முதலாளிக்கு? ஏன் ஒரு மாதிரி இருக்காரு. நிச்சயதார்த்தத்தையும் நிறுத்திட்டான்''

''ஆமா கோவிந்தா, என்னே தெரியலை. முந்தா நாள் காலைல நான் தான் ஒரு டிபன் பார்சல் வாங்கிட்டு வந்தேன். மாலைமுரசு பேப்பர்ல பார்சல் கட்டி கொடுத்திருந்தான். அந்த பேப்பரை டிபன் சாப்பிட்டுகிட்டே தம்பியும் படிச்சிச்சு. அப்ப ஆரம்பம் ஆச்சு விவகாரம். முதல்ல இப்ப கல்யாணம் வேண்டாம்னுச்சு அப்பால புதுசா பண்ணை வாங்கறதுக்கு ரூ. 2 லட்சம் அட்வான்ஸ் கொடுத்துருந்துச்சு இல்லையா...? அதையும் திருப்பி வாங்கிடிச்சு. கஷ்டப்பட்டு ஒரு இருபது லட்ச ரூபாய் காந்தி நகர்ல வீடு ஒண்ணு கட்டியிருந்திச்சுல்ல...?''

''ஆமா...''

''அவர் குழந்தைகள் ஸ்பெஷலிஸ்ட்டா இருக்கலாம். அதுக்காக இப்படியா?''

'என்ன?'

''ப்ரிஸ்கிரிப்ஷன் ஸ்லேட்டுப் பலகையில எழுதித்தர்றாரு!''

-ப.கோபிபச்சமுத்து,
கிருஷ்ணகிரி.





''அதையும் விக்கதாட்டம் தெரியுது. புரோக்கர் ஆளுங்க வந்து வந்து போய்கிட்டிருக்காங்க....''

முனியசாமி சொன்ன தகவல்கள் கோவிந்தனை நெளியச் செய் தன.

''எலேய் முனியா பெருசா ஏதோ நடந்துருக்குது. அதான் உன் முத லாளி இப்படி எல்லாம் நடந்துக்கறான். ஆனா ஒண்ணு இவன் இப்ப டியே இருந்தா கோழிப்பண்ணை காலிப்பண்ணையாயிடும். ஒரு வயசுப் பையன் கைகால ஊனி எழுந்திருச்சி நல்லா மேல வந்துகிட் டிருக்கான்னு சந்தோஷப்பட்டேன். என் கண்ணே பட்டுருக்காட்டம் இருக்கு....'' என்று புலம்பிக் கொண்டே வெளியே நின்றிருந்த டெம்ப்போ டிராவலரையும் கிளப்பினான்.

அவனது டிராவலர் அந்த பண்ணையை விட்டு வெளியேறி ஒரு வளைவில் திரும்பிய இடத்தில் போலீஸ் ஜீப்புக்கு வெளியில் நின்று கொண்டு ஒரு ரோந்துப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தார் ருத்ரா. கோவிந்தனின் டெம்ப்போ டிராவலர் வரவும் கை நீட்டித் தடுத்தார். கோவிந்தனுக்கு அச்சமாகியது. அவனுக்கு போலீஸ் என்றாலே உதறல். ஐம்பதுக்கும் நூறுக்கும் எல்லாப்பாடும் படுத்தி விடுவார்கள். எனவே அவர்கள் மேல் மரியாதை மதிப்பும் கிடையாது. கோவிந் தன் முகத்தில் எல்லாவித உணர்வுகளும் ஊர்வலமாக போயிற்று. ருத் ராவுக்கு ஒருவர் முகத்தை வைத்தே மனதுக்குள் இருப்பதை சொல லத் தெரியும்.

கோவிந்தனிடமும் தயாரானார்.

''வணக்கம் சார்...''

''என்னய்யா வண்டியில...''

''கோழி முட்டைங்க..''

''எவ்வளவு...?''

''இன்னிக்கு சும்மா ஐநூறு முட்டைதாங்க...''

''லைசென்ஸ் ஆர்சிபுக்கெல்லாம் இருக்கா...''

''அதெல்லாம் கரெக்டா இருக்குங்க.. பாக்கறீங்களா?''

''வேண்டாம் உள்ள வை. ஆமா உன்பேர் என்ன?''

''கோவிந்தனுங்க....''

''இதுதான் உன் தொழிலா?''

''ஆமாங்க...''

''வண்டி சொந்த வண்டியா- இல்ல வாடகைக்கு ஓட்றியா?''

''சொந்த வண்டிங்க பேங்க் லோன் போட்டு வாங்கினது. மாசம் பதினேழாயிரம் சோத்துக்கு இருக்கோ இல்லையோ கட்டிடணும்க...''

''முட்டைகளை எங்க இருந்து வாங்குவே...''

''பண்ணைங்கள்ள இருந்து தாங்க...''

''இங்க எங்கய்யா இருக்கு பண்ணை... கோழிப்பண்ணைன்

னாலே நாமக்கல் பக்கத்துல்ல சொல்வாங்க..''

''அட என்னங்க நீங்க.. இங்க பார்த்திபன் பண்ணை நாமக்கல் பண்ணைங்க மாதிரியே நல்லா பெரிய பண்ணை ஆச்சே....''

''அப்படியா... அது யாருய்யா அது பார்த்திபன்?''

''பண்ண முதலாளி பேருங்க...''

''யாரது... பார்த்திபன் பேர்ல ஜெயிலுக்கு போய்ட்டு வந்த ஒருத்தன் இந்த பக்கத்துல இருக்கறதா சொல்வாங்க.... அவனா...?''

''சேச்சே.. இந்த பார்த்திபன் தங்கமான புள்ளைங்க...''

''நீ என்ன உரசிப் பாத்தியா?''

''இப்படிக் கேட்டா எப்படிங்க...?''

''தெரிஞ்சுக்கதான்யா கேக்கறேன். இப்பல்லாம் கோழிப் பண்ணை நடத்தறேங்கற பேர்ல முட்டைல பவுடர் கடத்தறாங்க தெரியுமா?''

''இந்த தம்பி அப்படி எல்லாம் கிடையாதுங்க. உழைச்சு முன்னுக்கு வந்திருக்கற தம்பி. படிப்படியாதான் இந்த உயரத்துக்கு வந்துருக்குது. பணத்தை விட பழக்கத்தை பெருசா நினைக்கற புள்ளை.... நிறைய தெய்வ பக்தியும் உண்டு. வருசம் தவறாம மதுரைல இருந்து பழனிக்கு பாதயாத்திரையா நடந்தே போய்ட்டு வர்ற புள்ளைங்க....''

கோவிந்தன் மனதாரவே பார்த்திபன் பற்றிச் சொன்னான். இருந்தும் ருத்ராவுக்கு அது போதுமானதாக இல்லை ''நீ உன்னோட சப்ளையர விட்டுத் தருவியா? பெருசாதான் சொல்வே. உள் ரெய்டு போனா எல்லாம் தெரிஞ்சிட்டு போகுது...''

''ஐயோ சார்... அவரசப்பட்டு அப்படி எல்லாம் பண்ணிடாதீங்க பாவம் பார்த்திபன்.. ஏற்கனவே ஏதோ பிரச்சனை? மனசு ஒடிஞ்சு போய் இருக்கான். நீங்க ரெய்டு கிய்டு போனா எல்லாமே தப்பாயிடும். அவன் உயிரையே விட்ருவான்....

''ஏற்கனவே ஏதோ பிரச்சனைன்னா.... என்னய்யா பிரச்சினை?''

''யாருக்கு சார் தெரியும். வீட்ல பொண்ணுபாத்து நிச்சயம் பண்ணப்போறாங்க. இப்ப அந்த இடம் வேண்டாம் விட்ருங்கன்னு சொல்றான். நான் கூட கேட்டேன்... பெரிய இடம் பார்த்திபன் எதுவும் கேட்காமலே அஞ்சு லட்ச ரூபாயை வரதட்சணையா தர்றாங்க. ஆனா புடிக்கலேன்னுட்டான். ஏதோ மனத்தாங்கல்- என்னன்னு தெரியல....''

''வாழப்பழத்தை வேண்டாம்னு சொல்ற குரங்கு கூட உண்டாய்யா? அஞ்சு லட்ச ரூபா வரதட்சணையை வேண்டாம்னு உன் முதலாளி சொல்லிட்டாங்கறியே... நம்பற மாதிரி எதாவது சொல்லுய்யா...''

''நான் சொன்ன அவ்வளவும் சத்தியங்க... அப்புறம் உங்க



இஷ்டம். எனக்கும் தலைக்கு மேலே வேலை கிடக்குது. நான் போகட்டுங்களா?''

கோவிந்தனின் விசுக்கென்ற பதிலில் ஒரு கோபம் தென்பட்டது. அது ருத்ராவுக்கும் பிடித்திருந்தது.

''சரி நீ புறப்படு.... '' என்றார். அவனும் விட்டால் போதும் என்று வண்டியை கிளப்பினான். ருத்ராவிடம் ஒரு பெருமூச்சு!

## 5

'யாருக்கும் விரோதி வெளியில் இல்லை!'

யாரோ ஒரு பெண் வந்து காத்திருப்பதாக அங்கம்மாள் கூறவும் வெளியே வந்து பார்த்தான் பார்த்திபன்.

சந்திரா தான் காத்துக் கொண்டிருந்தாள்.

''நீங்களா.. வாங்க, வாங்க...''

''இது தான் உங்க ப'ண்ணையா...?''

''ஆமாங்க... பரவாயில்லியே கண்டுபிடிச்சு வந்துட்டீங்களே...'''

''மொத்தம் எவ்வளவு கோழிங்க இருக்குது...''

''அவன் பண்ணையை பார்த்த படியே கேட்டாள்.

''ஐயாயிரத்துக்கும் மேல இருக்கும்...'' அவன் சொன்னபடியே அவளை அழைத்துக் கொண்டு நடந்தான்.

கொக் கொக் கொக் 'எனும் கோழிகளின் இளைப்பெடுத்த சத்தம். ஒருவித கசட்டு வாசம்! கைக்கு பிளவுஸ் மாட்டிக் கொண்டு ஒருவர் சில கோழிகளுக்கு ஊசி போட்டுக் கொண்டிருந்தார்.

''இதென்ன கோழிக் கெல்லாமா ஊசி போடுவாங்க...?''

''பாக்கறீங்களே போட்றாங்கல்ல...?''

''ஆச்சரியமா இருக்கு....'' அவள் கண்கள் விரிந்து கொண்டன. முகத்திலும் ஒரு சன்னமான வெளிச்சம் தெரிந்தது. அவன் அதை ரசித்தான்.

''இப்படி ஊசி போடாட்டி இந்த கோழிக்கு வந்திருக்கிற வியாதி அப்படியே எல்லா கோழிக்கும் பரவி ஒரே நாள்ள எல்லா கோழிங்களும் செத்துடும்....''

''நெஜமாவா....?''

''ஆமாம்... சூதாட்டம் மாதிரிதான் கோழி வளக்கறதும்! ரொம்ப ரொம்ப கவனமா இருக்கணும். கோழிப் பண்ணையை ஒருத்தர் நல்லா நடத்தறார்னா அவர் ரொம்ப சுகாதாரமா இருக்கார்னு உக்காந்த இடத்துல சொல்லலாம்.''

''ஆனாலும் கோழிப் பொறப்பே பாவப் பொறப்புதானே?''

''எப்படி?''

...ம் இயற்கைசாவே இல்லையே? அடுத்து ...டங்கறதுமில்லையே. நம்ம வயிறு தானே அதுங் ...காடு...''

அவனது புதிய கோணம் அவனுக்கு சற்று அதிர்ச்சியை தந்தது. அது தான் எவ்வளவு பெரிய உண்மை! அவளை உன்னிப்பாக பார்த்தான். அப்படியே சுற்றி வந்தார்கள். ஒரு இடத்தில் முனியசாமி கருப்பு சட்டியில் கம்பு, கேழ்வரகு இவற்றுடன் கொஞ்சம் புண்ணாக்கை சேர்த்து கலக்கி கோழிகளுக்கு உணவு தயாரித்துக் கொண்டிருந்தான். அவனுக்கும் பின்னாலே பண்ணையின் வேலிப் படப்பு அதன் ஓர் ஒரு நல்ல பாம்பு மெல்ல உள் நுழைந்து கொண்டிருந்தது. எதற்கோ திரும்பியவன் அதைப் பார்த்து விட்டு அதை அடிப்பதற்காக தடியை எடுத்துக் கொண்டு 'ஏய்..ஏய்..ஏய்..' என்றபடி ஓடினான். ஆனால் அது அவன் கண்ணுக்கு ....படாதபடி அதே வேலிப் படப்புக்குள் புகுந்து தப்பித்து விட்டது. சப்தம் கேட்டு பார்த்திபனும், சந்திராவும் அவனைப் பார்த்தனர்.

''பாம்பு தம்பி இதுவரை பத்து கோழிக்குஞ்சை கவ்விகிட்டு போயிடுச்சு.. '' என்றான் தலைப்பாகையை அவிழ்த்து உதறியபடி!

''வேலிப்படப்பை நல்லா இறுக்கமா போடுங்கண்ணே... நாகதாளி வேரை வாங்கிட்டு வந்து வேலிய காட்டுங்க.....''

''அதெல்லாம் எகத்துக்கும் கட்டியாச்சு தம்பி. இந்த காலத்து பாம்புங்க எல்லாத்துக்கும் போய்ட்டு வாங்குதுங்க. நீங்க போங்க. இந்த பாம்பை அடிக்காம நான் விடப் போறதில்லை. அதுக்கு என் கையாலதான் சாவு''

முனியசாமியின் ஆவேசம் சந்திராவை படபடக்கச் செய்தது.

''என்ன பாக்கறீங்க? கோழிப் பண்ணைன்னா பாம்புங்க இங்க எப்படியாவது வந்துடும். நாமதான் கவனமாக இருக்கணும்.''

''ரொம்ப ஆபத்தான தொழிலாவும் இருக்கும் போல இருக்கே...''

''அப்படியும் சொல்லலாம். ஆனா ஆபத்து எதுல இல்லை?''

''அதுசரி உங்க குவாலிபிகேஷன் என்ன?''


''பெருசா சொல்லிக்கற மாதிரி நான் படிக்கலங்க. பிளஸ் டூ படிச்

''என்னங்க எனக்கு ஒரு 'ரிங்' வேணும்''

''லேண்ட் லைனில் இருந்தா, மொபைல்ல இருந்தா?''

-எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.





''ஆட்டுக்கும் கோழிக்கும் இயற்கை சாவே இல்லையே? அடுத்து மண்ணுல நேரா அடங்கறதுமில்லையே. நம்ம வயிறு தானே அதுங்களுக்கு சுடுகாடு...''

அவளது புதிய கோணம் அவனுக்கு சற்று அதிர்ச்சியை தந்தது. அது தான் எவ்வளவு பெரிய உண்மை! அவளை உன்னிப்பாக பார்த்தான். அப்படியே சுற்றி வந்தார்கள். ஒரு இடத்தில் முனியசாமி கருப்பு சட்டியில் கம்பு, கேழ்வரகு இவற்றுடன் கொஞ்சம் புண்ணாக்கை சேர்த்து கலக்கி கோழிகளுக்கு உணவு தயாரித்துக் கொண்டிருந்தான். அவனுக்கும் பின்னாலே பண்ணையின் வேலிப் படப்பு அதன் கீழ் ஒரு நல்ல பாம்பு மெல்ல உள் நுழைந்து கொண்டிருந்தது. எதற்கோ திரும்பியவன் அதைப் பார்த்து விட்டு அதை அடிப்பதற்காக தடியை எடுத்துக் கொண்டு 'ஏய்..ஏய்..ஏய்..' என்றபடி ஓடினான். ஆனால் அது அவன் கண்ணுக்கு ....படாதபடி அதே வேலிப் படப்புக்குள் புகுந்து தப்பித்து விட்டது. சப்தம் கேட்டு பார்த்திபனும், சந்திராவும் அவனைப் பார்த்தனர்.

''பாம்பு தம்பி இதுவரை பத்து கோழிக்குஞ்சை கவ்விகிட்டு போயிடுச்சு.. '' என்றான் தலைப்பாகையை அவிழ்த்து உதறியபடி!

''வேலிப்படப்பை நல்லா இறுக்கமா போடுங்கண்ணே... நாக தாளி வேரை வாங்கிட்டு வந்து வேலிய காட்டுங்க.....''

''அதெல்லாம் ஏகத்துக்கும் கட்டியாச்சு தம்பி. இந்த காலத்து பாம்புங்க எல்லாத்துக்கும் போய்ட்டு வாங்குதுங்க. நீங்க போங்க- இந்த பாம்பை அடிக்காம நான் விடப் போறதில்லை. அதுக்கு என் கையாலதான் சாவு''

முனியசாமியின் ஆவேசம் சந்திராவை படபடக்கச் செய்தது.

''என்ன பாக்கறீங்க? கோழிப் பண்ணைன்னா பாம்புங்க இங்க எப்படியாவது வந்துடும். நாமதான் கவனமாக இருக்கணும்.''

''ரொம்ப ஆபத்தான தொழிலாவும் இருக்கும் போல இருக்கே...''

''அப்படியும் சொல்லலாம். ஆனா ஆபத்து எதுல இல்லை?''


''அதுசரி உங்க குவாலிபிகேஷன் என்ன?''

''பெருசா சொல்லிக்கற மாதிரி நான் படிக்கலங்க. பிளஸ் டு படிச்

''என்னங்க எனக்கு ஒரு 'ரிங்' வேணும்''
''லேண்ட் லைனில் இருந்தா, மொபைல்ல இருந்தா?''

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.





...காரணமா கல்லூரிக்கு போக முடி
...ல்லுல வேலைக்கு சேர்ந்தேன். சரியான சம்பளம்
யக்கல.. ஆனா நல்ல அனுபவம் கிடைச்சது. அதுக்கு பிறகு ஒரு ஐஸ் பேக்டரில வேலை... அங்கு மழைக் காலத்துல பிசினஸ் இருக்காது.... இப்படி நான் பாத்த வேலைங்கள்ள ஒவ்வொண்ணும் ஒவ்வொருவிதம் அப்பதான் காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, கோழிப் பண்ணை வளர்ப்பு பத்தி கேள்விப்பட்டேன். முதல்ல ஒரு பத்து கோழி தான் வாங்கினேன். அப்புறம் அது நூறாச்சு. நூறு முந்நூறாச்சு.... முந்நூறு ஆயிரமாச்சு... இன்னிக்கு ஐயாயிரம் கோழிங்க... எட்டு மாசம் வரை விடாம முட்டை போடும். ஒன்பதாவது மாசம் முட்டை போட்றது நின்னுடும். சப்தமும் அதிகமா போடும். அப்ப அதை கறிக் கோழியாக்கி ஹோட்டல்களுக்கு வித்துடுவேன்....''

பார்த்திபன் தொழில் முறைகளை விவரித்துக் கொண்டே போனான். அவளும் பாம்பைப் பற்றிய பயம் விலகாமலே கேட்டுக் கொண்டாள். அவனது ஆபீஸ் ரூமும் வந்தது. கதவை திறந்து கொண்டு உள் நுழைந்தவன். அவளை உட்காரச் சொல்லி ஏ.சி.யை இயங்க விட்டான். கம்ப்யூட்டரில் தனக்கான மெயில் பாக்ஸையும் திறக்க ஆரம்பித்தான். இடையில் தொலைபேசி அழைத்தது. அதற்கு காதைக் கொடுத்தான்.

''பார்த்திபன் தம்பியா?''

''நானேதாங்க... ஆர்டர் புக் பண்ணணுமா?''

''ஆமாம் தம்பி பொண்ணு வயசுக்கு வந்துட்டா ஊரை கூப்புட்டு விருந்து போடணும். கறிக் கோழிங்க வேணும்?''

''எவ்வளவு கோழிங்க தேவைப்படுங்க....''

''ஒரு நூறு கோழிங்க...''

''ஒரு அரை மணி நேரம் கழிச்சு போன் பண்ணுங்கண்ணே நான் நூறு கோழிங்க முதல்ல தேறுமான்னு பாத்துக்கறேன்....''

''பாத்து எப்படியாவது போட்டு விடுங்க தம்பி.. வழக்கமான ரேட்டவிட கோழிக்கு பத்து ரூபாய் கூடுதலா கூட போட்டுவிட்றேன். எப்படியாவது அனுப்புங்க...''

'உங்க பையனுக்கு ரொம்ப கொழுப்பு'

'ஏன் சார்?'

'பாயில் விதியைக் கூறுன்னா, அதுல படுத்தா நல்லா தூங்கலாம்னு சொல்றான்!'

-ப.கோபிபச்சமுத்து.
கிருஷ்ணகிரி.





''இருந்தா தாண்ணே போட்டுவிட முடியும்? உங்களுக்காக முட்டை கோழிங்க கறி கோழிங்க ஆக்க முடியுமா? பாக்கறேன்...''

பேசிவிட்டு போனை வைத்தான். எழுந்து சென்று கதவைத் திறந்து கொண்டு ''முனியசாமிண்ணே....'' என்று குரல் கொடுத்து முனியசாமியை அழைத்து ''கறி கோழிங்க நூறு கோழிங்க அவசரமா வேணும். தேறுமா பாருங்க. ஓடுங்க, ஓடுங்க....'' என்றான். பின் திரும்ப வந்து தன் சீட்டில் அமர்ந்தான். கம்ப்யூட்டரில் அவனது மெயில் பாக்ஸ் காத்துக் கொண்டிருக்க ''அட... இதை ஓபன் பண்ணிட்டே நான் எல்லா வேலையும் பார்த்துருக்கேனா...?'' என்றபடியே மெயில் பாக்சில் தனக்கென வந்திருந்த ஒரு செய்தியை வேக வேகமாக படித்துவிட்டு அதை திரும்ப ஷட் டவுன் செய்தான். நிமிர்ந்தான்.

அவனது செயல்களையே வெறித்தவளாக எதிரில் சந்திரா.

''உங்கள உட்கார வெச்சுட்டே நான் எல்லா வேலையையும் பாத்துக் கிட்டிருக்கேன். என்ன சாப்பிடறீங்க?''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். தேங்க்ஸ்...''

''அப்புறம் எதுக்கு வந்துருக்கேன்னே நீங்க சொல்லவே இல்லையே...?''

''இல்ல... உங்க பண்ணை எப்படி இருக்குன்னு பாத்துட்டு போக தான் வந்துருக்கேன்...''

''அப்ப இங்க வேலைக்கு சேர்றத பத்தி ஒரு முடிவுக்கு வரப்போ
றேன்னு சொல்லுங்க...''

உம்.... அப்படி கூட வெச்சுக்கலாம். ஆனா இங்க எனக்கு பெருச
வேலை இருக்கற மாதிரியே தெரியலியே...''

''பாக்க அப்படி தான் இருக்கும்... வந்தா வரிசையா வந்துகிட்
இருக்கும்.''

''அதுசரி... நிஜமாலுமே எனக்கும் என் தங்கைக்கும் பன்னெ
டாயிரம் பன்னெண்டாயிரம்னு இருபத்தி நாலு ஆயிரத்தை
களால மாசா மாசம் தர முடியுமா?'' - அவளது சந்தேகம் அவனு
சிரிப்பைத் தந்தது.

''என்ன சிரிக்கறீங்க?''

''சிரிக்காம.. உங்களுக்கு கட்டாயம் உதவி செய்யணு
ஆசைப்பட்டதால அப்படி சொன்னேன். இங்க என் மாச
வியாபாரமே மூணுல இருந்து நாலு லட்சத்துக்குள்ளதான்
பத்து பர்சன்ட் இடம் பராமரிப்புக்கும், பத்து பர்சன்ட் வேலை
ரங்க சம்பளத்துக்கும், அறுபது பர்சன்ட் கோழித் தீவனத்
போயிடும். மீதி இருக்கற இருபது பர்சன்ட் தான் என் லாபம்
கரண்ட் பில், முப்பதுல இருந்து நாற்பதாயிரம் இருக்கும். அ
இருபத்தஞ்சாயிரம் பேங்க் லோனுக்கு வட்டியோட சேர்ந்
டும். மிச்சத்துல தான் நான் என் அம்மா என்னோட இ

கைக்க எல்லாரும் வாழறோம்...''

''அப்ப உங்களுக்கே ஒரு பத்து பதினஞ்சாயிரம் தான் கிடைக்கும்னு இருக்கும் போது எங்களுக்கு எப்படி இருபத்திநாலாயிரம் தர முடியும்...?''

''அது சில மாசங்களுக்கு தான். நான் என் வீடு ஒண்ணை விக்கப் போறேன். அதுல வர்ற பணத்தை வெச்சு உங்க அப்பா சொஸைட்டில வாங்கின லோனை அடைச்சுட்டா மாசம் இருபதாயிரம் ரூபா வட்டியும் அசலும் கட்டத் தேவையில்லையே?''

''நீங்க இந்த அளவு எங்களுக்கு உதவி செய்ய நினைக்கிறது எனக்கு ஆச்சரியமா இருக்கு. அப்படி என்ன எங்கப்பா உங்களுக்கு உதவி செய்துட்டாரு?''

அவள் கேட்ட கேள்வியும் அதில் உள்ள நியாயமும் அவனை வெறிக்க விட்டது.

''சொல்லுங்க எங்கப்பா அப்படி என்ன உங்களுக்கு செய்துட்டாரு?''

''நான் இப்ப இந்த அளவுக்கு ஒரு பண்ணைக்கு முதலாளியா இருக்கேன்னா அதுக்கு காரணமே உங்கப்பா தாங்க''

''பத்து கோழி, நூறு கோழி, ஆயிரம் கோழின்னு படிப்படியா முன்னேறினதா சொல்லிட்டு எங்கப்பா காரணம்னா எப்படி புரியலயே?''

''அவர் எனக்கு நிறைய தன்னம்பிக்கை கொடுத்தார். எந்த நிலையும் நேர்மையை விட்டுடக்கூடாதுன்னு சொல்வார். இப்ப நீங்க உட்கார்ந்துகிட்டிருக்கற இடத்துல தான் உட்கார்ந்திருப்பார். எப்ப வந்தாலும் அவருக்கு உங்களைப் பத்தின கவலை தான். என் இரண்டு பெண்களையும் நான் நல்ல படியா கட்டிக் கொடுத்துட்டா போதும் தம்பி. எனக்கு வாழ்க்கைல வேற எந்த தேவையோ எதிர்பார்ப்போ கிடையாதுன்னு சொல்வார்''

''அப்ப அப்பா உங்களுக்கு நிறைய நல்லது சொல்லியிருக்கார்னு சொல்லுங்க''

''ஆமாங்க ஒரு பெத்த தகப்பனைப் போல அவர் என் மேல காட்டின பாசம் என்னால மறக்க முடியாத ஒரு விஷயம்''

''இந்த மாதிரி நல்லதை திருவள்ளுவரும் சொல்லியிருக்கார். அவ்வைப் பாட்டியும் சொல்லியிருக்காங்க. அதுக்காக பல லட்ச ரூபாயுள்ள எங்க குடும்ப கடனை நீங்க அடைக்க நினைக்கறது எனக்கு உண்மையில நம்ப முடியாத ஆச்சரியமா தாங்க இருக்கு''

''சாருக்கு நான் ஏதாவது செய்யணும்னு அடிக்கடி நினைப்பேன். ஆனா அதுக்குள்ள அவர் ஒரு விபத்துல இறந்து போவார்னு நான் கனவுல கூட நினைக்கல. உங்க நிலையையும் பத்திரிகையில படிச்சப்போ ரொம்ப கஷ்டமா இருந்தது. அதனால தான் இந்த முடிவு''

''சரி இதுக்கு நாங்க சம்மதிக்க மறுத்துட்டா''

''அப்படியெல்லாம் செய்யறவங்களா இருந்தா நீங்க இவ்வளவு



தூரம் என்னைப் பாக்க வருவீங்களா என்ன?''

''வந்ததே மறுப்பைச் சொல்றதுக்கா இருந்தா?''

சந்திரா அழுத்தமான பதிலோடு அவனை ஊடுருவினாள். அவளிடம் தடுமாற்றம்.

''என்ன பாக்கறீங்க. உங்க உதவிக்கு நன்றின்னு சொல்லிட்டு போகதான் வந்தேன்.

''நிஜமாவா?''

''இதுல நிஜமென்ன? பொய்யென்ன? எங்கப்பா எங்களுக்கு சில நல்ல விஷயங்களை அழுத்தமா சொல்லிக் கொடுத்துருக்கார். அதுல ஒண்ணு உதவின்னு ஒருத்தர் கிட்ட போய் சார்ந்து நின்னுடக் கூடாதுங்கறது.

அவள் பதில் அவன் கன்னத்தில் அறைந்தது போல் இருந்தது. முகம் மாறிப் போனது. எதிர்பாராத பதில் வந்த விதத்திலும் ஒரு நாசூக்கு. அவன் கண்களிரண்டும் கலங்கி விட்டிருந்தன. அவள் அவன் கலங்குவதையும் பார்த்தாள்.

''நான் சாதாரணமா சொன்னேன். உங்கள வருத்தப்பட வைக்கிறது என் நோக்கம் இல்லை'' என்றாள் வேகமாக.

''நல்ல் பாலிசி தான் போகட்டும். எந்தவித உதவியும் பெறாம எப்படி உங்களால இப்ப இருக்கற பிரச்சனைல இருந்து மீண்டு வர முடியும்?''

''நல்ல கேள்வி தான். எங்களுக்கு கை கொடுக்க போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ருத்ரா இருக்கார். அப்பா தொலைச்ச பணத்தை அவர் கட்டாயமா கண்டுபிடிச்சிடுவேன்னு சொல்லிக்கிட்டிருக்கார். அது கிடைச்சாலே போதும். பாதி பிரச்சனை தீர்ந்து விடுமே?''

அவள் பதில் பார்த்திபனை சற்று திடுக்கிட வைத்தது.

''ஒரு வேளை அந்த பணம் கிடைக்காமலே போய்ட்டா?''

''எங்களுக்கு ருத்ரா அங்கிள் மேல நிறையவே நம்பிக்கை இருக்கு''

சந்திரா அதற்கு மேல் பேச விரும்பாதவள் போல எழுந்து கதவையும் திறந்து கொண்டு ''நான் வரேன்'' என்றபடி வெளியேறினாள். அவன் அவளைத் தடுக்கவில்லை. அவள் முடிவை மாற்றவே துளியும் முடியவில்லை.

## 6

'இரவும் பகலும் உள்ள வரை நல்லவர்கள் தீயவர்கள் கட்டாய[illegible] இருப்பர்'

பண்ணையை விட்டு வெளியே வந்த சந்திரா காலையில் வெ[illegible]

தூரம் வந்து விட்ட நிலையில் ருத்ராவின் ஜீப் அவளை உரசிக் கொண்டு வந்து நின்றது. அவளும் அதில் ஏறிக் கொள்ள ஜீப்புக்குள்...

''என்னம்மா... பார்த்திபனை பார்த்தியா பேசினியா?''

''உம்''

''என்ன சொன்னான்? உனக்கு எப்படி தெரியுது?''

''தப்பா பெருசா எதுவும் தெரியல சார். இப்போதைக்கு அவ்வளவு தான் என்னால சொல்ல முடியும்.''

''ஏன் ஒரு மாதிரி இருக்கே?''

''ஒரு நல்ல மனுஷனை உங்க பேச்சை கேட்டு ரொம்ப காயப்படுத்திட்டேனோன்னு தோணுது சார்''

''அப்ப பார்த்திபன் நல்ல பையன்தான்கறது உன் கருத்து. அப்படி தானே?''

நிச்சயமா சார். படிப்படியா முன்னேறித்தான் இந்த உயரத்துக்கே அவர் வந்துருக்கறதா நான் நினைக்கறேன்''

''உள்ள ஒரு அரை மணி நேரம் இருந்துருப்பியாம்மா?''

''கிட்டத்தட்ட...''

''அதுக்குள்ள அவனை உன்னால முழுசா புரிஞ்சுக்க முடிஞ்சிட்டதா?''

''ஏன் அங்கிள் உங்களுக்கு சந்தேகம் இன்னும் தீரலியா?''

''சந்தேகம் பட்டுகிட்டே இருக்கணும்மா. அதான் என் போலீஸ் உத்தியோகத்துக்கான லட்சணம்''

''என்ன உத்தியோகமோ? சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க சார். அப்பா இறந்து மூணுமாசத்துக்கும் மேல ஆச்சு. அந்த பணம் தொடர்பா ஒரு சின்ன ஆதாரத்தை கூட நீங்க கண்டுபிடிச்சதா எனக்கு தெரியல. இப்படி ஒரு நிலைல தானா உதவி செய்ய முன் வந்த ஒருத்தரை சந்தேகப்பட்டு இவர் கூட குற்றவாளியா இருக்கலாம்னு நீங்க நினைக்கறது நல்லவங்களை கொச்சைப்படுத்தற மாதிரி இருக்கு சார்''

''சரிம்மா. நீ பேசி முடிச்சிட்டியா. இல்ல இன்னும் ஏதாவது இருக்கா?''

''நான் சொல்றதுல என்ன சார் தப்பு இருக்கு?''

''நான் தப்பு இருக்குன்னுல்லாம் சொல்லவே இல்லையேம்மா''

''அப்ப எதனால அவரை சந்தேகப்படுறீங்க?''

''அதான் சொன்னேனே. அது என் தொழில்...! அது மட்டும் இல்லை. பத்து லட்சத்தை எல்லாம் சாதாரணமா கொடுக்கற நிலைல ஒண்ணும் அந்த பையன் இல்லை''

''அதை அவரும் என்கிட்ட மறைக்கல அங்கிள். தன்னோட மாத வருமானம் எவ்வளவு நிக்கும்? எவ்வளவு நிக்காதுன்னு எல்லாத்தையும் புட்டுபுட்டு வெச்சிட்டாரு''.

''இருபத்தி நாலாயிரம் உங்களுக்கு சம்பளம் தரேன்னு சொன்



னது உனக்கு ஆச்சரியமாயில்ல. ஒரு கோழிப்பண்ணைல அந்த சம்
பளமெல்லாம் தர முடியுமா?''

''அதுக்கும் அவர் தெளிவான பதிலை சொல்லிட்டாரு அங்கிள்''

''சரிம்மா. முடிவா இப்ப நீ என்ன சொல்லவரே?''

''இந்திராவுக்கு ஏத்த மணமகன் தான் அந்த பார்த்திபன்.''

''அப்ப உதவியை ஏத்துக்கற தப்பு இல்லேங்கறே?''

''நிச்சயமா''

''நல்லா தெளிவா யோசிச்சு சொல். இன்னிக்கு தான் சொல்லணும்னு இல்லை. நாளைக்கு கூட சொல்லலாம்.''

''சரி அங்கிள் ஆனா அவர்கிட்ட உங்க உதவி தேவை இல்லைன்னு பளிச்சின்னு சொல்லிட்டேன். அப்படி சொன்ன நொடி அவர் கண் கலங்கிட்டாரு. அது தான் என்னை ரொம்பவே சிந்திக்க வெச்சது''

''சரிம்மா. நீ உன் சிஸ்டர் கிட்ட கலந்துக்கோ. அப்புறம் சொல். உங்க பதிலுக்கு பிறகு நான் அந்த பார்த்திபனை எப்படி சந்திக்கணுமோ அப்படி சந்திச்சு என்ன பேசணுமோ பேசிக்கறேன். பை த பை ஒரு முக்கியமான விஷயம்''

''என்ன அங்கிள்?''

''உங்க அப்பா தொலைச்ச பணம் சம்மந்தமா நான் ஒரு ஆதாரத்தை கூட கண்டுபிடிக்கலன்னு சொன்னே. ஆனா ஒண்ணுக்கு பத்து என் இன்வெஸ்டிகேஷன்ல கிடைச்சிருக்கும்மா''

''அங்கிள் நிஜமாவா?''

''யெஸ்... உங்கப்பாகிட்ட அடிச்ச பத்துலட்ச ரூபா பணத்தை அதை அடிச்சவன் போன வாரம் வெளிய எடுத்து பேங்குலயும் போட்டுருக்கான். சொஸைட்டில கொடுத்த பணத்தோட ரூபாய் நோட்டுக்களோட நம்பர் லிஸ்ட்டை மதுரைல எல்லா பேங்க்லயும் கொடுத்து இந்த எண்கொண்ட பணம் வந்தா தகவல் தரச் சொல்லியிருந்தோம். அந்த வகைல தான் தகவல் வந்தது. பணத்தை போட்டிருக்கிற நபர் அதை பிக்ஸட் டெபாசிட்ல போட்டிருக்கான். அவனை பத்தின தகவல்களை கேட்டிருக்கோம். ரொம்ப ரொம்ப சீக்கிரம் அந்த நபர் யார்னு தெரிஞ்சிடும். அடுத்து உங்கப்பா பத்து லட்ச

''கோயில் உண்டியலை சுத்தி இவ்வளவு போலீஸ் நிக்குது...''

''தலைவர் கோவிலுக்கு வந்திருக்காராம்...''

-கே.பிரசன்னகுமார், குடந்தை.



ரூபாய் வெச்சிருந்த தோல் பைல பணம் மட்டும் இல்லாம கூடவே ஒரு அட்ரஸ் டைரியும் வெச்சிருக்கார். உன் கல்யாணத்துக்காக மூனு பவுன்ல ஒரு சங்கிலியும் வாங்கி வெச்சிருந்துருக்கார். அந்த சங்கிலியும் ஒரு நகைக்கடைல விக்கறதுக்காக வந்திருக்கு. உங்கப்பா யார்கிட்ட வாங்கினாரோ அதே நகைக்கடையில அந்த சங்கிலியை உங்கப்பா பேரை சொல்லியே சம்பந்தப்பட்ட நபர் திருப்பிக் கொடுத்து பணம் கேட்டிருக்கான். ஆயிரம் ரூபாய் வரை குறைச்சுகிட்டு கூட பணம் கொடுங்கன்னு சொல்லியிருக்கான். அவரும் அப்படியே வாங்கிட்டாரு. சில நாள் கழிச்சு உங்கப்பா இறந்த தகவல் தெரியவரவும் தான் அவருக்கு உங்கப்பா பணம், நகை இரண்டையுமே தொலைச்ச விஷயம் தெரியவந்துருக்கு. அப்படியே தன்கிட்ட வித்த நபர் தான் திருடன்கறதையும் அவர் புரிஞ்சுகிட்டார். நாளைக்கு அந்த திருடன் என் கைல சிக்கி நாங்க எங்கடா நகைன்னு கேட்கும் போது அவன் நகை கடையை காட்டினா அப்ப அந்த நகைக்கடைக்காரரும் வசமா மாட்டுவார். ஆகையால முன்னெச்சரிக்கையா அந்த நகைக்கடைக்காரர் அந்த நகையோட வந்து என்னை பார்த்தாரு. அவர்கிட்ட வித்த ஆளை அடையாளம் காட்டவும் தயாரா இருக்காரு.

ஒரு போலீஸ்காரனா நான் ஒரு பக்கம் என் கடமையை சரியா செய்துகிட்டேதாம்மா இருக்கேன். சம்பந்தப்பட்ட நபர் புத்திசாலியா இருந்தா அவனை ஏமாத்தவும் மிஸ் கைட் பண்ணவும் தான் போலீஸ் விசாரணை எந்த முன்னேற்றமும் இல்லேங்கற மாதிரி ஒரு சிச்சுவேஷனை மெய்ன்டெய்ன் பண்ணிக்கிட்டே வரேன்.

உனக்கு ஒரு அதிர்ச்சியான விஷயத்தையும் இப்பவே சொல்லிடறேன். உங்கப்பாவோட விபத்தே ஒரு வேளை பணத்துக்காக திட்டமிட்டு நடத்தப்பட்டிருக்கலாம். ஐ மீன் அது ஒரு கொலையாவும் இருக்கலாம்''

ருத்ரா சொல்லி முடிக்க சந்திராவுக்கு அதைக்கேட்டு இதயமே நடுங்கியது.

''அங்கிள்''

''இது ஒரு வியூகம் தான். பணத்தை அபகரிச்சுகிட்டு போன குற்றவாளி பிடிபடும்போது எல்லாமே தெரியவந்துடும்''

சிரித்தபடி அவர்கள் ஜீப் அவள் வாசலில் வந்துநிற்க சரியாக இருந்தது.

சந்திராவும் இறங்கிக் கொண்டாள்.

''போம்மா போய் நல்ல விதமா யோசிச்சு நாளைக்கே எனக்கு பதிலைச் சொல். உங்க பதிலுக்கு பிறகு நான் பார்த்திபன்கற அந்த நபரை பாக்கறேன்''

என்றவாறே ஜீப்பில் திரும்பவும் சீறிக் கொண்டு புறப்பட்டு போனார். சந்திரா நெற்றிச் சுருக்கங்களோடு வீட்டினுள் நுழைந்தாள். உள்ளே நாற்காலியில் காபி குடித்தபடி அந்த புரோக்கர். அவனை பார்க்கவும் சற்று பகீரென்றது. ஒரு மாதிரி சிரித்தான். சற்று தள்ளி



நின்ற நிலையில் இந்திரா டி.வியில் சீரியல் ஓடிக் கொண்டிருக்க அதை பார்த்துக் கொண்டிருந்தாள். சந்திரா வந்து நிற்பது கூட தெரியவில்லை. புரோக்கர் தான் பேசினான்.

''என்னம்மா வெளியே போயிட்டு வர்றீயா?''

''வெளியில் இருந்து வந்தாலே வெளிய போய்ட்டு வரோம்னு தானே அர்த்தம் இதென்னய்யா அசட்டுத்தனமா கேட்டுகிட்டு''

அவள் பதிலே கடுமையாக இருந்தது. சந்திராவும் டி.வி.யில் இருந்து கலைந்து திரும்பினாள்.

''அக்கா''

''என்ன அக்கா கதவை அடைச்சுகிட்டு வீட்டோட இருக்கறது தெரியாம இருக்கணும்னு உனக்கு எவ்வளவு தடவை சொல்லியிருப்பேன்?''

அவளின் சிடுசிடுப்பை அவனும் புரிந்து கொண்டான்.

''பெரிய பொண்ணே... நான் வந்தது புடிக்கலைன்னா நேரா சொல்லும்மா போயிடறேன். அதை ஏன் திட்றே?''

''உனக்கு புரிஞ்சா சரி. புறப்படு''

''உதவியை மட்டும் ஒருத்தர் கேக்காம செய்யவே கூடாதும்மா. அப்படி செய்யப்போனாலே அதுக்கு மதிப்பு இடையாதுங்கறதை நான் இப்ப உன்னை வெச்சு நல்லா புரிஞ்சுகிட்டேன்''

''என்னய்யா உதவி மண்ணாங்கட்டி உதவி. எங்க வீட்டை எப்படியாவது எங்க கிட்ட இருந்து வாங்கியே தீரணும்கறதுல குறியா இருக்கே நீ. உனக்கு கமிஷன் கிடைக்கணும்கறதுக்காக நாங்க தெருவில நிக்கணுமா?''

''நீ எதுக்கும்மா தெருவுல நிக்கணும். நாட்ல எத்தனை லட்சம் பேர் வாடகை வீடுங்கள்ள குடியிருக்காங்க. நீயும் இருந்துட்டுப்போ''.

''சொந்த வீட்டுல இருந்து வாடகை வீட்டுக்கு எங்கள துரத்தறதுக்கு பேர் தான் உன் அகராதில உதவியா?''

''அப்படி இல்லம்மா. நல்ல விலை கிடைக்கும்போது விடக்கூடாதுன்னு பாக்கறேன். ரூபாய் 11 லட்சம் சொன்ன நபர் இன்னிக்கு 13 லட்சம் வரை வந்துட்டார். அமுக்கி பிடிச்சா 15 லட்சம் ரூபாய் தாராளமா கிடைக்கும். பத்து லட்ச ரூபா தான் அதுல உங்க கடன். சொச்சம் அஞ்சு லட்சத்துல உன் கல்யாணத்தை தடபுடலா நடத்திடலாம். உங்கப்பா இருந்திருந்தா இன்னேரம் உன் கல்யாணம் நடந்து முடிஞ்சு நீ மாசமாவும் இருந்துருப்பேம்மா''

புரோக்கரின் பேச்சிலும் கொஞ்சம் நியாயம் இருக்கற மாதிரி தான் பட்டது.

''சந்தோஷம். இப்போதைக்கு இந்த வீட்டை விக்கற அவசியம் எங்களுக்கு இல்லைங்கறது தான் எங்க நிலை. எங்கப்பா தொலைச்ச பணம் எங்களுக்கு கிடைச்சுடும்கற ஒரு நிலை இருக்கும் போது நான் எதுக்கு வீட்டை விக்கணும். நீங்க புறப்படலாம்''

சந்திரா சொன்னது புரோக்கரை அதிரச் செய்தது.

''என்னம்மா சொல்றே? உங்கப்பா தொலைச்ச 10 லட்ச ரூபா பணம் உங்களுக்கு கிடைக்கப்போகுதா?''

''ஆமாம். நீங்க போகலாம்னேல்ல''

''இரும்மா. நீ நிஜமாதான் பணம் கிடைச்சிடிச்சின்னு சொல் றியா?''

''கிடைசிடிச்சின்னு சொல்லல கிடைச்சிடும்னு சொல்றேன்.

''போலீஸை அப்ப நீ இன்னமும் நம்பிக்கிட்டிருக்கேன்னு சொல்''

'' போலீஸை மட்டுமில்ல.. நாங்க எங்கப்பாவையும் நம்பு றோம், அவர் எங்களை கஷ்டப்பட விடமாட்டார்.''

'' என்னமோம்மா.. திருடிகிட்டோ இல்லை வழியில கிடைச்சுதுன்னு தூக்கிகிட்டோ போனவன் கூட திரும்பி கொண்டுகிட்டு வந்து கொடுப்பான்னு சொல்.. நான் அதை கேட்டுக்கிறேன். ஆனா போலீஸ் பணத்தை மீட்டு தரும்னு சொல்றதை என்னால நம்ப முடியல. அவங்க நம்மகிட்டையும் கை நீட்டுவாங்க. திருடன் கிட்டையும் கை நீட்டுவாங்க..''

''போதும்.. வளவளன்னு பேசாம புறப்படுங்க..'' அதற்கு மேல் இருந்தால் அவள் கழுத்தில் கைவைத்து தள்ளி விட்டாலும் விடலாம் என்று தோன்றவே அரைமனதோடு எழுந்து புறப்பட்டான் அந்த புரோக்கர், நூத்துக்கு இரண்டு ரூபாய் ஆயிரத்துக்கு இருபது - லட்சத்துக்கு இரண்டாயிரம் பதினைந்து லட்சத்துக்கு முப்பதாயிரம்!

## 7

'எண்ணம் போலத் தான் வாழ்க்கை அமையும்!'

சிடுசிடுவென்று இருந்த சந்திராவை இந்திரா சற்று பயத்துடன் பார்த்தாள். மெல்ல வாய்திறந்தாள்.

''அக்கா... போனகாரியம் என்னக்கா ஆச்சு?''

'' என்னன்னுடி சொல்லேன்.. அவரைப் பார்த்தா ரொம்ப நல்ல மனுஷனாத்தான் தெரியுது. ஆனா ருத்ரா அங்க்கிள் அவரையும் சந் தேகப்பட்றாரு..''

''அவரையா.. எதை வெச்சு?''

''தேடிவந்து உதவி செய்யறேன்னு சொன்னதை வெச்சுதான்..''

''நமக்கே அந்த சந்தேகம் இருந்ததேக்கா...''

'' போடி லூசு.. அந்த பார்த்திபனை ஒருவேளை குற்றவாளின் னேவை. ஒரு குற்றவாளி தான் குற்றம் செய்த இடத்துக்கே தைரியமா திரும்பி வருவானா?''



'' ஒ நீ இப்படிவர்றியா?''

'' பின்ன...? அதுமட்டுமில்ல.. அவரோட பேச்சு அணுகுமுறை
அந்த கோழிப்பண்ணை எல்லாமே எனக்கு நல்லாத்தான் படுது.
அங்க ஒரு மர்மம் இருக்கற மாதிரியே தெரியில. பார்த்திபன் எல்லா
வகையிலும் மனசுல என்ன இருக்குதோ அதையே பேசற மாதிரி தான்
தோணுது.''

'' இதை நீ அங்க்கிள் கிட்ட சொன்னியா?''

''சொல்லாம இருப்பேனா..? குறிப்பா உங்க உதவியெல்லாம்
வேண்டாம் எங்கப்பா எங்களை அப்படி எல்லாம் வளக்கலன்ன உட
னேயே கண்கலங்கிட்டார் தெரியுமா?''

'' சரிக்கா.. பண்ணை எப்படிக்கா இருக்குது?''

'' நல்லா பெருசா இருக்குது இந்திரா.. ரெண்டுபேர் வேலை பாத்
துகிட்டுருக்காங்க ஏ.சி. ஆபீஸ் ரூம் அதுல கம்ப்யூட்டர்னு நல்லா
தெளிவாத்தான் இருக்காரு..''

'' யக்கா அப்ப உனக்கு அவரை பிடிச்சு போச்சுன்னு சொல்..''

'' கிட்டத்தட்ட அப்படி தாண்டி. என்னைவிட நீ நல்லா இருக்க
ணும் அது தான் என் விருப்பம்..''

'' ரெண்டு பேருமே நல்லா இருப்போம்கா... ஏன்கா நீ என்னை
மட்டும் சொல்றே? நீ நல்லா இல்லாம நான் மட்டும் இருந்தா அது
நல்லாவா இருக்கும்?''

''இல்ல இந்திரா.. நான் எவ்வளவு தூரம் நல்லா இருக்கப்போ
றன்னு எனக்கு தெரியில..''

சொல்லும் போதே கண்கலங்கிவிட்டாள் சந்திரா,

'' என்னக்கா திடீர்னு கண்கலங்கிறே... இப்ப என்ன ஆயிடிச்சு?''

'' ஊர் அறிய நிச்சயதார்த்தம் நடந்து எனக்கு பாதி கல்யாணம்
முடிஞ்சிடிச்சு. பாழாப்போன பணம் எனக்கு பாத்த குடும்பத்தை அப்
படியே பின் வாங்கும்படி பண்ணிடிச்சே? நிச்சயத்தன்னிக்கு தனியா
பேச ஆசைப்பட்ட அவர் என்கிட்ட எப்படி எல்லாம் பேசினாரு..!
ஆனா இப்ப என்னை பெரிய கடங்காரியால்ல பாக்கறாரு..''

சந்திராவின் கண்கலங்கி கண்ணீர் உதிர ஆரம்பித்தது.

'' விடுக்கா.. எல்லாம் சரியாயிடும். ஆமாம் அப்பா தொலைச்ச

'எம் பொண்டாட்டி அருவி மாதிரி!'

'எப்படி?'

'தலையில கொட்டுவா!'

-ப.கோபிபச்சமுத்து.
கிருஷ்ணகிரி.



பத்துலட்சமும் கிடைச்சிடும்னு புரோக்கர்கிட்ட சொன்னியே.. எதை வெச்சுக்கா?''

''ருத்ரா அங்க்கிள் தான் இந்திரா சொன்னார். அப்பா தொலைச்ச அதே பணம் ஒரு பேங்க்ல டெபாசிட் ஆகியிருக்கு. திருடி எடுத்து கிட்டு போன உடனேயே பேங்குல போடாம ஒரு மூணுமாசம் கழிச்சு போட்டுருக்கான் திருடன். அது மட்டுமல்ல அப்பா தொலைச்ச பணத்தோட ஒரு மூணுபவுன் சங்கிலியும் இருந்துருக்கு அதையும் விக்கப்போயிருக்கான். இப்படி ஒவ்வொரு விசயமா நடந் துகிட்டு இருக்கு இதைவெச்சு அவனை பிடிச்சிடுவோம்னு அங்க்கிள் தான் சொன்னார்.''

''அக்கா.. நிஜமாலுமே அவன் கிடைச்சு பணமும் கிடைச்சிட்டா ரொம்ப நல்லா இருக்கும் இல்ல..''

நாம ஆசைப்படலாம். ஆனா நடக்கணுமே.. பார்ப்போம், ''

''இல்லக்கா பணம் கிடைச்சிடும். நீ வேணாபாரு உன் கல்யாண மும் ஜாம்ஜாம்னு நடக்கத்தான் போகுது.''

இந்திரா தனது நம்பிக்கையை வெளிக்காட்டும் போதே வெளிப் பக்கம் ஒரு ஆட்டோ வந்து நிற்கும் அரவம்.

இருவரும் எட்டிப் பார்த்தனர்.

அதிசயம் போல அதிலிருந்து சந்திராவுக்கு பார்த்த மாப்பிள்ளை யான கதிரேசன் இறங்கிக் கொண்டிருந்தான்.

இருவருக்குமே இன்ப அதிர்வானது. ஆட்டோவை அனுப்பி விட்டு வாசல் அருகே வந்து நின்று தன்னைப்பார்க்கும் சந்திரா இந் திரா இருவரையும் வெறித்தான்.

அவர்களும் அதிர்வில் இருந்து விடுபட்டு அவனை உள்ளே அழைத்தனர். ''வாங்க''

அவனும் உள்ளே நுழைந்தான்.

''உட்காருங்க..''

தயங்கியபடி அமர்ந்தான்.

என்ன சாப்பிட்றீங்க..''

ஒண்ணும் வேண்டாம்... '' என்று வாய்திறந்தான்..

''எங்க இவ்வளவு தூரம்...'' இந்திரா சற்று தைரியமாக கேட்டே விட்டாள்.

''எப்படி ஆரம்பிக்கறதுன்னே தெரியலம்மா..''

''அப்ப எதோ முக்கியமான விசயம்னு சொல்லுங்க..''

''ஆமாம்மா.. முறிஞ்சி போயிட்டதா எல்லாரும் நினைக்கற எங் களுக்குள்ள நடந்த நிச்சயதார்த்தத்தை உயிர்ப்பிக்க வந்துருக்கேன்..''

''அப்படின்னா...?''

''என்னம்மா.. புரியலையா.. நான் உங்கக்காவை முழுமனசா கல் யாணம் பண்ணிக்கற எண்ணத்தோட வந்துருக்கேன்.''

கதிரேசன் வந்த விஷயத்தை சொல்லி முடிக்க அங்கே ஒரு கனத்த மௌனம் இரு தரப்பிலும் .. பின் அதை மெல்ல உடைக்கத் தொடங்



கினாள் இந்திரா.

''என்னங்க இது திடீர்னு..''

''திடீன்னுல்லாம் இல்லம்மா! சந்திரா தான் என் மனைவிங்கிற எண்ணத்தோடதான் எப்பவும் இருந்தேன். இந்த வீட்டுக்கடன் நடு வுல என் அப்பா அம்மாவை வேறமாதிரி யோசிக்க வெச்சது. அவங்க தயக்கத்துலயும் நியாயம் இருந்தது. ஆனா இதே சம்பவம் எங்க கல் யாணத்துக்கு பிறகு நடந்துருந்தா என்ன செய்திருக்க முடியும். அப்ப ஏத்துகிட்டு போகறத தவிர வேறவழி இல்லையே?''

''இந்த முடிவை ஏன் நீங்க முதல்லயே எடுக்கல...?''

''தோணலம்மா.. நேத்து பார்த்திபன்னு ஒருத்தர் வந்து என்னை சந்திச்சு பேசின பிறகு தான் எனக்கே என் தவறு தெரிஞ்சது.''

கதிரேசன் தன் பேச்சில் பார்த்திபனைத் தொடவும் இந்திராவுக்கு ஜிலீர் என்று இருந்தது. சந்திராவும் சற்று சிலிர்த்துப் போனாள்.

''பார்த்திபன் ரொம்ப அழகா பேசினார்... அவர் பேச்சுல ஒரு நல்ல நியாயம் இருந்தது. இந்த வீட்டு சொஸைட்டி கடனை தான் ஏத் துக்கப் போறதாவும் , என்னை கல்யாணத்துக்கு மட்டும் சம்மதிச்சா போதும்னு சொன்னப்போ எனக்கு ரொம்ப வெட்கமா கூட இருந் தது. இத்தனைக்கும் பார்த்திபன் ஒரு மூணாவது மனுஷன்.. நானோ நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை. நான் பேச வேண்டிய பேச்சை அவர் பேசினார். அவர் பேச வேண்டியதை நான் பேசிட்டேன்.. எல்லாத் துக்கும் சேர்த்து மன்னிப்பு கேட்டுகிட்டு கல்யாணத்துக்கு சம்மதம்னு சொல்லிட்டு போகத்தாம்மா வந்தேன்..''

''ஓ.. அவர் பத்துலட்சத்துக்கும் தான் பொறுப்புன்னு சொன்ன உடனே அப்பாடா நமக்கு எந்த சுமையுமில்லைன்னு கல்யாணத்துக்கு சம்மதிச்சுட்டீங்க.. அப்படித்தானே?''

இது வரை எதுவும் பேசாத சந்திரா கேட்ட கேள்விக்குள் ஏராள மான உட்பொருள். கதிரேசனுக்கு புரிந்தது .''தப்பா புரிஞ்சுகிட்டு பேசறே சந்திரா நீ.. அதுல சரிபாதிக்கு நான் பொறுப்பெடுத்துக்கறேன்னு அப்பவே சொல்லிட்டேன். முழுசையும் ஏத்துக்கற அளவுக்கு எனக்கும் பொருளாதார பலமெல்லாம் கிடையாது. இதை நீ புரிஞ்சுக்கணும்.''

கதிரேசன் பதில் அவள் கன்னத்தில் அறைந்தது போல் இருந்தது. தான் அவசரப்பட்டு விட்டோமோ என்பது போல பார்த்தாள்.

''சரிம்மா நான் புறப்பட்றேன்... உங்க வீட்டு சார்பா பேச வந்து ருக்கற பார்த்திபனோட இன்னும் யாராவது ஒரு இரண்டு பேர் புறப் பட்டு வந்து எங்க வீட்ல பேசுங்க.. கல்யாணத்துக்கு நாள் குறிச்சி டலாம். அதே நாள்ல பார்த்திபனை இந்திரா கல்யாணம் பண்ணிக் கிட்டா ரொம்ப சந்தோஷப்படுவேன். யோசிச்சு சீக்கிரமா ஒரு முடி வுக்கு வாங்க..''

கதிரேசன் சொன்ன சூட்டோடு கிளம்பிவிடவும். இருவரும் ஒரு வரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இந்திராவுக்கு பார்த்திபனை

நினைத்து சற்று நெகிழ்ச்சியாகவும் இருந்தது.

'' அக்கா நீ சொன்னது பெரிய உண்மைக்கா.. பார்த்திபன் உண்மையிலே பெரியமனுஷன்தான். இங்க பேசிட்டு போனதோட என்னன்னு இருக்காம இவரையும் தேடிப் போய் பார்த்து இவர் மனசையும் மாத்திட்டாரே..?''

'' ஆமாம்மா.. எனக்கு அதுதான் ஆச்சரியம்! நம்ம அப்பா பேர்ல அவருக்கு இருக்கற மரியாதைக்கு அவர் நம்மமேலகாட்டற இந்த அன்பும் அக்கறையும் அசாதாரணம்...''

'' சரிக்கா இப்ப என்ன பண்ணப் போறோம்.?''

'' ருத்ரா அங்க்கிள் வரட்டும்... பேசி ஒரு முடிவு செய்வோம்.''

இருவரும் தங்களுக்குள் ஒரு சமாதான மடைந்து அப்படியே லேசாகினர். பலப்பலநாட்களுக்கு பிறகு ஒரு லேசான மனநிலை ஏற்பட்டது. போல ஒரு உணர்ச்சி.

## 8

நிழல் என்றும் நம்மோடு...
நினைவுகள் என்றும் உணர்வோடு!

ஸ்டேஷனில் ருத்ராவை சந்தித்த அந்த விஜிலென்ஸ் போலீஸ்காரர் ஒரு கவரை ருத்ரா முன் நீட்டினார்.

'' என்ன லாரன்ஸ்... பேங்க் மேனேஜர் கொடுத்தாரா?''

'' ஆமாம்சார்... பேங்கில பணத்தை இன்வெஸ்ட் பண்ணின நபர் பேர் வேலாயுதமாம். அந்த நபர் அட்ரசும் இருக்கு.. வழியிலையே அந்த நபரை மீட் பண்ணி பணம் எப்படி வந்தது. சோர்ஸ் என்னன்னு கேட்டேன். அவர் ஒரு ரைஸ் மில் நடத்தறாரு.. மில்லுல அரிசி வாங்கினதுக்கு ஒருத்தர் கட்டின பணமாம் அது. அந்த அரிசி வாங்கின நபர் பத்தின டீடைய்ல் கேட்டுருக்கேன். சொல்றேன்னு சொல்லியிருக்கார்.. அனேகமா இன்னும் ஒரு அரைமணி நேரத்துல அவர்கிட்ட

"நம்ம தலைவருக்கு 'சொல்லின் செல்வம்'ன்னு பட்டம் கொடுத்தாங்க"

"பேசினாலே காசு கேட்கிறாரே இப்ப எல்லாம்."

-பி.பாலாஜி கணேஷ்,
கோவிலாம்பூண்டி.





இருந்து போன் வரலாம்.''

அந்த போலீஸ்காரர் சொன்ன தகவல் ருத்ராவை மீசையை நீ வச் செய்தது.

'' சார் யோசிக்கிறத பார்த்தா..?''

'' எதிரி புத்திசாலிய்யா.. பணத்தை மார்க்கெட்ல விட்டுட்டு தப்பிச்சிட்டான். அவனை இந்த ரூட்ல போய் பிடிக்கறது கஷ்டம்.''

'' அப்ப என்ன சார் பண்றது.?''

''இந்த அரிசி வாங்கின நபர் யார்னு வந்தாலும் பிரயோஜனம் இருக்காது. இவன் தனக்கு பணம் எப்படி வந்ததுங்கற சோர்ஸை வேறமாதிரி காட்டுவான்..''

'' வேறவழியே இல்லையாசார்..''

'' வழி இல்லைன்னு சொன்னா நீயும் நானும் போலீஸ்லையே இருக்க கூடாது. வழியை நாம் உருவாக்கணும்...''

'' அதான் எப்படி சார்...?''

'' நீ ஒரு பக்கம் யோசி.. நான் ஒரு பக்கம் யோசிக்கறேன். ஆனா பணத்தோட போன இந்த நபரை மட்டும் விடக் கூடாது.''

ருத்ராவிடம் ஒரு தீர்க்கத்தையும் மீறி ஆவேசம் தெரிந்தது!

கோழிப்பண்ணை! பார்த்திபன் முகத்தில் சுரத்தே இல்லை மோட்டார் பைக் சப்தம் கேட்டது... கதிரேசன்!

'' வாங்கசார்...''

'' என்ன பார்த்திபன் ரொம்ப டல்லா இருக்கீங்க போல இருக்கு..''

'' ஆமாம் சார்.. மனசுல உற்சாகமே இல்லை. பேசாம இந்த கோழிப்பண்ணையை யாருக்காவது கொடுத்துட்டு சன்யாசம் வாங்கிக்கலாமான்னு பாக்கறேன்..''

'' ஐயோடா.. இது என்ன இவ்வளவு விரக்தி?''

விரக்திங்கறத விட வேற எதாவது வார்த்தை இருந்தா சொல்லலாம்..''

பார்த்திபனிடம் பெருமூச்சும் சேர்ந்து வெளிப்பட கதிரேசன் சிரித்தார்.

'' பைதபை.. நான் அவங்க வீட்டுக்கு போயிருந்தேன்..''

'' அவங்க வீட்டுக்குன்னா..?''

'' என்ன பார்த்திபன் தெரியாத மாதிரி கேட்கறீங்க சந்திரா வீட்டுக்குப் போனதைதான் சொன்னேன்..''

'' ஓ.. வெரிகுட்! அவங்கள பாத்து பேசினீங்களா.. எல்லாம் சரியாயிடிச்சா..''

'' கிட்டதட்ட ஆயிட்ட மாதிரிதான். நீங்க என்னை சந்திச்சு பேசினதையும் சொன்னேன்..''

'' அட என்னங்க நீங்க.. அதை எதுக்கு சொன்னீங்க?''

'' அது தானே உண்மை பார்த்திபன். நீங்க வராம போயிருந்த நான் குழப்பத்துலயே தான் இருந்துருப்பேன். இப்ப இரண்டுல ஒ

ஒனுன்னு ஒரு முடிவு எடுத்தாச்கல்ல..''

'' சந்தோஷம்.. ஆனா என் உதவியைதான் அவங்க ஏத்துக்கற மாதிரி தெரியல..''

'' நான் அப்படி நினைக்கல.. நாம ரெண்டு பேருமே அந்த வீட்டுக்கு மாப்ளைகளாகப் போறோம் .. எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. பார்த்திபன்.''

'' பாப்போம் கதிரேசன் சார்.. நல்லது நடந்தா சந்தோஷம்!''

'' கட்டாயம் நடக்கும். கல்யாணத்தை பெருசா மண்டபம் பாத்துத் தான் பண்ணணும்கறதில்ல. சிம்ப்பிளா ரிஜிஸ்டர் மேரேஜ் போதும். ரெண்டு பக்கமும் பத்து பத்து இருபது பேர் இருந்தா அதுவே அதிகம்.''

'' அதுக்குள்ள கல்யாணம் வரை போய்ட்டீங்களே.. அவங்க மேல அவ்வளவு நம்பிக்கையா?''

'' நிச்சயமா.. நான் தெரியாம தான் கேக்கறேன். பெத்தவங்க இல்லாத இந்த அனாதைங்களுக்கு நம்மை விட்டா வேறயார் வர முடியும்னு நினைக்கிறீங்க..''

'' அப்படி எல்லாம் ரொம்ப மலிவா யாரையுமே நினைக்க கூடாது கதிரேசன். பார்ப்போம்.. அவங்க கிட்ட இருந்து என்ன பதில் வருதுன்னு..''

'' அப்ப நான் புறப்படறேன்.. அவங்ககிட்ட இருந்து பதில் வந்த நிமிஷம் திரும்பவரேன். நம்ம இரண்டு பேர் கல்யாணமும் ஒரே நாள்ள நடக்கணும்னு என் விருப்பத்தை அழுத்தமா சொல்லியிருக்கேன்..''

கதிரேசன் ஒரு மெசென்ஜர் போல நடந்ததை சொல்லிவிட்டு திரும்பவும் அந்த வேகம் குறையாமல் புறப்பட்டு போனான்.

மெல்ல எதிரில் வந்து நின்றான் முனியசாமி கூடவே அங்கம்மாளும்..

'' என்ன முனியசாமி.. அங்கம்மாளோட ஒண்ணா வந்துருக்கே?''

'' உன்னோட கொஞ்சம் பேசலாம்னு தான் தம்பி..''

'' பேச என்னண்ணே இருக்கு போய் வேலையைபாருங்க.''

'' இப்ப நாங்க உட்க கூட பேசறது கூட வேலைமாதிரிதான். ஏன் தம்பி. எல்லாமே நல்லாதானே போய்கிட்டேயிருக்கு.''


'' அதுக் கென்னண்ணே?''

'' இல்ல ஒரு பக்கம் நிச்சயத்தை நிறுத்திட்டே இன்னொரு பக்கம் வீட்டை விக்கறே.. புதுசா ஒரு பொண்ணு வந்துட்டு போவுது இப்ப இன்னொருத்தர் வந்துட்டு போறாரு..''

'' இதுக்கெல்லாம் பதில் தெரியணுமா..?''

'' ஆமாம் தம்பி.. உங்க தங்கச்சி வேற எப்பபார் அழுது கிட்டே இருக்கு. உங்க தங்கச்சி புருஷன் கொஞ்சம் முந்தி வந்து உங்க தங்கச்சிகிட்ட ஒரு நூறுரூபா காசுக்கு கண்ட படி பேசிட்டாரு. ஆனா பணத்தை வாங்கிட்டு தான் தம்பி போச்சு..''





''அப்ப அவன் குடிச்சிருந்தானா?''

''ஆமாம் தம்பி ஆனா பெருசா போதைன்னு சொல்லமாட்டேன்.''

''போதைல பெரிய போதை என்ன.. சின்ன போதை என்ன?''

''சரி.. இப்ப அதுக்கென்ன?''

''சொன்னா கேட்கணும் தம்பி..''

''முதல்ல சொல்லுங்க..''

எதனால் தம்பி இப்படி எல்லாம் நடந்துக்குறே.. ஏன் நிச்சயத்த நிறுத்தினே?

'நிறுத்தலேண்ணே.. எனக்கு பிடிச்ச பொண்ணா பார்த்து கல்யாணம் பண்ணிக்க போறேன். அவ்வளவுதான் விஷயம்.

'இங்க வந்துட்டு போச்சே...அந்த பொண்ணா..?'

'இல்லண்ணே அதோட தங்கச்சியை..'

கட்டின வீட்டை ஏன் விக்கணும்?'

'எல்லாம் ஒரு பணத் தேவைக்காகத் தாண்ணே..'

'பாத்து தம்பி..நீ நல்லா இருந்தாதான் நாங்களும் நல்லா இருப்போம்..'

'நான் நிச்சயம் நல்லா தான்ணே இருப்பேன். கவலைப்படாதீங்க.' அவர்கள் விலகவும் கோவிந்தன் வந்தான்.

'பார்த்திபா உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்பா'

'என்னண்ணே..நீங்களும் ஏன் வீட்டை விக்கறே..ஏன் நிச்சயதார்த்தத்தை நிறுத்தப்போறேன்னு கேட்க போறீங்களா..'

'இல்லப்பா..இது வேற விஷயம்..'

'சொல்லுங்க'

'நேத்து திடீர்ன்னு ஒரு போலீஸ்காரர் என்னை புடிச்சு உன்னை பத்தியே கேட்டுக்கிட்டிருந்தாரு..'

'என்ன பத்தியா?'

'ஆமாம்..சுருக்கமா சொன்னா நீ நல்லவனா, கெட்டவனான்னு அவர் தெரிஞ்சுக்க ஆசைப்பட்டமாதிரி தான் இருந்தது.'

''எனக்கு வந்துருக்கற வியாதி என்னன்னே சொல்லாம ஏகப்பட்ட மருந்து எழுதித் தர்றீங்களே?''

''வியாதி என்னன்னு தெரிஞ்சா சொல்லமாட்டேனா?''

-ப.கோபிபச்சமுத்து,
கிருஷ்ணகிரி.





'அப்படியா?'

'என்னப்பா..அப்படியான்னு சாதாரணமா கேக்கறே..போலீஸ் கேக்குதுன்னா பின்னால நிச்சயமா ஏதோ இருக்குதுப்பா..'

'சரிண்ணே..நான் பாத்துக்கறேன்..'

வேகமாய் பதில் சொன்ன பார்த்திபன் விரைவில் நிறையவே மாறி போனான். வேகமாக விலகி அறைக்குள் நுழைந்து கொண்டு கதவையும் தாழிட்டுக் கொண்டான். எல்லாமே கோவிந்தனுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது.

# 9

பல நாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டே தீருவான்.

ஸ்டேஷனில் மீண்டும் அந்த விழிலென்ஸ் போலீஸ்காரர்.

'என்னாச்சு லாரன்ஸ்-அரிசி கடைக்காரர் கொடுத்த தகவல் உபயோகமா இருந்ததா?'

'நீங்க சொன்ன மாதிரிதான் சார்.. ரைஸ் மில்லுல ஒரு நாளைக்கு இருபது லட்ச ரூபாய்க்கு வியாபாரம் ஆகுது. யார் கொடுத்த ரூபான்னு சொல்றது. இருந்தாலும் லட்சத்துல வியாபாரம் செய்தவங்க மூணுபேர்தான். அதுல ஒரு நபர் உங்க சஸ்பெக்ஷன்ல இருக்கிற பார்த்திபன் சார்.

அந்த பதிலால் விருட்டென்று நிமிர்ந்தார் ருத்ரா. 'கோழிகளுக்கு குருணை அரிசி வாங்கின விலைல ஒன்றரை லட்ச ரூபாய் கொடுத்திருக்காரு. அந்த ஒன்றரை லட்சமும் வெங்கடகிருஷ்ணன் சார் கடன் வாங்கின தொகைல இருந்த நோட்டுகள் தான்சார். மீதி இரண்டு பேர் அவங்க பேங்க்ல டிராப் பண்ணது பாஸ்புக்ல பார்த்தப்போ தெரிஞ்சிடிச்சு சார்..'

'வெரிகுட்..இதை வேற எங்கேயும் யார்கிட்டேயும் ஷேர் பண்ணிக்க வேண்டாம். மிச்சத்த நான் பார்த்துக்கறேன்..'

ருத்ரா அப்படி ஒரு பதிலை சொன்ன போது அதனுள் எத்தனையோ அர்த்தங்கள்!'

கச்சிதமாக போன் செய்தாள் சந்திரா!

'அங்க்கிள்..'

'என்னம்மா ஒரு நல்ல முடிவெடுத்திட்டீங்களா?'

'ஆமாம் அங்க்கிள்..'

'சொல்லுங்க..நான் இப்ப என்ன செய்யணும்?'

'எங்க கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யுங்க அங்க்கிள்.

'யூமீன் உங்க இரண்டு பேருக்கும்...'

'ஆமாம் அங்கிள்.. காலைல எனக்கு பார்த்த மாப்பிள்ளையாக கதிரேசன் வந்திருந்தார். மிஸ்டர் பார்த்திபன் கதிரேசனைப் பார்த்து என் கல்யாணத்துக்காக பேசியிருந்திருக்கார்.

அதனால அவர் இட்டேயும் ஒரு பெரிய மாற்றம்.. இப்ப அவருக்கு சொசைட்டி கடன் ஒரு விஷயம் இல்லை. அந்த கடனை ஆளுக்கு பாதியா கட்றதுக்கு தயாரா இருக்காங்க. நிச்சயம் செய்த மாதிரி கல்யாணம் நடத்த லாம்னாரு.

'வெரிகுட்...அப்ப உங்க இரண்டு பேருக்குமே ஒரே நாள்ள கல்யாணத்த வெச்சுக்கலாம்னு சொல்.'

'ஆமாம் அங்கிள்..கல்யாண செலவுல இருந்து மத்த எல்லா விஷயங்கள் மிச்சமாகுமே..எனக்கும் என் தங்கையை பத்தின கவலையே இல்லாம போயிடும்.

'சரிம்மா..நான் போய் பார்த்திபனை பார்த்து பேசிட்டு வந்து சொல்றேன். அவர் உதவியை நீங்க மறுத்தது தப்புன்னு நான் சொன்னேன்னும் சொல்றேன்.'

'சந்தோஷம் அங்கிள்..இனி எல்லாம் உங்க கைலதான் இருக்கு..'

உற்சாகமாய் பேசினாள் சந்திரா! ருத்ராவிடமோ அந்த இருபெண்களின் இந்த சந்தோஷமும் பார்த்திபன்தான் குற்றவாளி என்றால் பறிபோய்விடுமே என்கிற அச்சம் இருந்தாலும், இந்த கல்யாணத்தை மையமாக வைத்தே உண்மையை நெருங்கி விடவேண்டும் என்றது அவரது போலீஸ் புத்தி!

கோழி பண்ணை!

கோழிபண்ணைக்கு தீவனம் வைத்துக் கொண்டிருந்தான் பார்த்திபன். பண்ணையின் மெயின் கேட் திறக்கும் சப்தம் கேட்டு திரும்பினான். இந்திரா நுழைந்து கொண்டிருந்தாள். குருணைச்சட்டியோடு வாங்க வாங்க என்று வரவேற்றான். அவளும் சுற்றிச்சுற்றி பார்த்தாள். பின் சற்று வெட்கமுடன் 'நான் வருவேன்னு எதிர் பார்க்கல இல்ல.''என கேட்டாள்.

'ஆமாம் மேடம்.. இட்ஸ் எ பிளசன்ட் சர்ப்ரைஸ்..'

'அக்கா செய்த தப்பை சரி செய்யத்தான் நேரில் வந்துட்டேன்.'

'புரியற மாதிரி சொல்லுங்க..'

'உங்க அன்பையும், உதவிகளையும் ஏத்துக்கறது தான் மரியாதைன்னு எனக்கு தோணிச்சு. அக்காவுக்காக கதிரேசன் சாரையும் போய் பார்த்திருக்கீங்க. அவரும் வீட்டுக்கே வந்து கல்யாணத்தை எப்ப வெச்சுக்கலாம்னு கேட்டுட்டு போனாரு..''

'தெரியும்..'

'எப்படி?'

'இங்க வந்து என்கிட்ட சொல்லிட்டுதான் போனாரு..'

'திடீர்னு வாழ்க்கை இப்படி திசை திரும்பும்னு நாங்க இரண்டு பேருமே நம்பல. ஒரு உயிருக்கு இரண்டு உயிர் போனதுல ஏற்பட்



டது அதிர்ச்சின்னா.. ஒரு உயிருக்கு இரண்டு உயிர் எங்களை கல்யாணம் செய்துக்க ஆசையா முன் வந்துருக்குறது இன்ப அதிர்ச்சி.'

'இப்ப என்னை கல்யாணம் பண்ணிக்கறதுல உங்களுக்கு ரொம்பவே சந்தோஷம்னு சொல்லுங்க.'

'நிச்சயமா. உங்க மனைவியா காலம்பூரா நான் கடனை அடைப்பேன்.

'பெரிய வார்த்தை எல்லாம் எதுக்கு..?'

அப்போது தொலைபேசியில் அழைப்பொலி!

'ஒரு நிமிஷம் 'என்றவனாக உள்ளே சென்றான். ரிசீவரையும் எடுத்து காதைக் கொடுத்தான்.

மறுபக்கம் ஸ்டேஷனில் இருந்து ஒரு போலீஸ்காரர் பேசினார்.

'பார்த்திபன் தானே?'

'ஆமாம் நீங்க..?'

'என் பேர் லாரன்ஸ்.. புலனாய்வுத்துறை போலீஸ் கான்ஸ்டபிள் நான். கொஞ்சம் ஸ்டேஷனுக்கு வர முடியுமா?'

'ஸ்டேஷனுக்கா..எதுக்கு சார்!'

'பதட்டம் இல்லாம வாங்க.. பலராமன்ங்கறது உங்க தங்கச்சி கணவரா?'

'அ...ஆமாம் சார்!'

'அவரை நாங்க அரெஸ்ட் பண்ணியிருக்கோம். அவர் தொடர்பா உங்க கிட்ட நிறையவே பேச வேண்டியிருக்கு..'

'சார்ர்ர்...

'என்ன பார்த்திபன் வாயைப் பொளந்துட்டு இருக்கீங்க.. நாங்களே உங்களோட பண்ணைக்கு வந்து உங்களை கைது செய்யக் கூட எங்களுக்கு உரிமை இருக்கு. ஆனா ருத்ரா சார் தான் நாம போக வேண்டாம். பார்த்திபனை கூப்பிடுங்க. அவர் வருவார்னு சொன்னார்.'

பார்த்திபன் அதன் பிறகு எதுவுமே பேசவில்லை. போனை வைத்தான். திரும்பினான். தலைவிரி கோலமாக வந்து கொண்டிருந்தாள் தங்கை ...

'ஏ.சி. அறை கதவை திறந்து கொண்டு அண்ணே.. வந்து காலில் விழுந்தாள்.

'எல்லாம் எனக்குத் தெரியும் .. தைரியமா இரு நிச்சயம் நான் உன் புருஷனோட தான் வெளிய வருவேன். சப்தம் போட்டு ஊரை கூட்டி ரகளை பண்ணிடாதே. யாராவது கேட்டாலும் குடிச்சுட்டு நடுத்தெருவில் நின்னு ரகளை பண்ணதுக்காக அவரை பிடிச்சதா சொல்லு..'

அவளுக்கு எடுத்து சொல்லி விட்டு வேகமாய் புறப்பட்டான் பார்த்திபன். வெளியே வந்தான். 'அவசர வேலை, நான் வெளியே போகணும் தப்பா எடுக்காதீங்க..' என்ற படியே வேகமானான்!

ஸ்டேஷன்!

ஜட்டியோடு லாக்கப்பில் பலராமன்!

பார்த்தபன் தங்கை கணவன்.

'எதுக்கு சார் என் தங்கை கணவரை புடிச்சு உள்ள வெச்சுருக்கீங்க..?'

'குடிச்சுட்டு கலாட்டா பண்ணா புடிச்சு உள்ள தானே போடுவோம்..'

'ஓ.. நான் கூட என்னவோ ஏதோன்னு நினைச்சு பயந்துட்டேன்..'

'என்னவோ ஏதோன்னா..அப்ப இவர் அரெஸ்ட் பண்ற மாதிரி நிறைய தப்பு பண்ணியிருக்கார்ன்னு சொல்லுங்க..'

'சேச்சே..அப்படி எல்லாம் எதுவும் கிடையாது சார்.. ரைட்..நீங்க இப்ப இவரை கூட்டிகிட்டு போகலாம். அதே சமயம் இவர் இன்னொரு தடவை குடிச்சாக்கா நான் என்ன செய்வேன் தெரியுமா?'

'சார்..'

'நிச்சயமா புடிச்சு வெளிய வராத படி உள்ள போட்டுடுவேன். ரொம்ப நாளா ஒரு கேஸ் பெண்டிங்குல இருக்கு..என்ன கேஸ் தெரியுமா?'

'ஒரு மனுஷன் பத்து லெட்ச ரூபாய் பணத்தோட மோட்டார் பைக்ல போயிட்டு இருக்கும்போது ஒருத்தன் லிப்ட் கேட்டு பின்னால உட்கார்ந்து போயிருக்கான். வழியில் மோட்டார் பைக் பிரேக் பிடிக்காம புளிய மரத்து மேல மோதினதுல ஒட்டிகிட்டு வந்தவர் தலைல பலமான அடிபட்டு அவர் ஸ்பாட் அவுட். இந்த நபர் அவர் வெச்சிருந்த பத்து லட்ச ரூபாய் பணத்தை எடுத்துகிட்டு கம்பி நீட்டிட்டான்.

மோட்டார் பைக்ல பிரேக் வயர் கட்டாகியிருந்ததை வெச்சு ஆக்சிடெண்ட்டை ஜட்ஜ் பண்ணோம். பணப்பை காணாம போனதை வெச்சு லிப்ட் கேட்ட நபர் தான் காரணம்னு கண்டு பிடிச்சோம்!

அந்த நபருக்கு ஏராளமான கடன்!

அந்த கடனை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா அடைச்சுட்டான். அந்த நபருக்கு ஒரு மச்சினன். பாவம் ரொம்ப நல்ல மனுஷன். அந்த மச்சினன் ஒரு கோழிப் பண்ணையை நடத்துறாரு. அதுக்காக லட்சக் கணக்குல வரவு செலவும் நடக்கும். இவர்தான் களவாண்ட பணத்தை இந்த வரவு செலவுக்கு செலவு பண்ணி இந்த பணத்தை கொண்டு

அவரோட கடைசி ஆசை எதுவானாலும் நிறைவேத்தி வைங்க..?

நர்ஸ் நளினி வேணுமாம் சார்...!"

-கே.பிரசன்னகுமார், குடந்தை.





தன்னோட கடனை அடைச்சிட்டான். மாட்டுனாலும் மச்சினர்தானே மாட்டுவார்னு புத்திசாலித்தனமான எண்ணம்தான் காரணம்.

அது புத்திசாலித் தனமான எண்ணம் மட்டுமல்ல கிரிமினலான புத்தியும் கூட....இல்லையா?'

ருத்ரா பார்த்திபனை ஒரு உலுக்கி உலுக்கிவிட்டார். பார்த்திபனிடம் ஸ்தம்பிப்பு. ஆனாலும் பல நாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டு தானே தீரணும்....அதான் அகப்பட்டுகிட்டான். ஆனா பாவம் அந்த மச்சினன். ஒரு பக்கம் தங்கச்சி புருஷனை காப்பாத்தணும். நடந்துட்ட தவறால பாதிக்கப்பட்ட குடும்பம் கரையேறவும் ரொம்பவே மெனக் கெட்டு பட்ட பாடு!

தன்னோட வீட்டை வித்தும், தனக்கு நிச்சயம் செய்ய இருந்த பெண்ணை வேண்டாம்னு சொல்லியும் ஒரு நல்ல காரியம் நடக்க அந்த மச்சினன் காரர் பட்டுகிட்டிருக்கிற பாடு இருக்கே அது ரொம்ப அன்பான ஒரு கொடுமை!

குற்றவாளியை தண்டிச்சா நடக்கப் போற நல்லதை விட கண்டிச்சும் மன்னிச்சும் வெளியவிட்டா நடக்கற நல்லது நிறைய. குறிப்பா நிர்க்கதியா நிக்கற இரண்டு பொண்ணுங்க வாழ்க்கை விடியும் ஆகையால் தான் இப்ப போலீஸ் ஆபீசரும் வெளிய விட்றாரு.

இது கொலை குத்தமில்ல.. திருட்டு குத்தம் தான். ஆனால் பதிலுக்கு செய்து விட்டுக்கற பிராய்ச்சித்தம் ரொம்ப ரொம்ப உன்னதமானதாச்சே..?'

ருத்ரா ஒரு கேஸ் ஸ்டடியையே ஜாடையாக சொல்லி முடித்து விட்டார்.

பார்த்திபன் கண்களிரண்டும் கலக்கி விட்டிருந்தன.

கைகளை கூப்பினான்! சரசரவென்று கண்ணீர் பெருக்கினான். ஜட்டியோடு இருந்த அவனது தங்கை கணவனுக்கோ தலையை நிமிர்த்தவே முடியவில்லை.

'சார்.. நான் செய்யப் போறதெல்லாம் ஒண்ணுமேயில்லை. சார். இப்ப நீங்க செய்திருக்கறதுதான் சார் பெரிய உதவி. இந்த நபர் திருந்த மாட்டாரான்னு நான் ஏங்காத நாள் இல்லை. என் தங்கை அழாத நாளே கிடையாது. ஆனா நீங்க இவரோட தப்பையே பயன்படுத்தி இன்னைக்கு இவரை கட்டிப் போட்டுட்டீங்க.

பணத்தை நான் கொஞ்ச நாள்ள சம்பாதிச்சுடுவேன். ஆனால் இப்படி ஒரு வாய்ப்பை கடவுளா பார்த்து கொடுக்காட்டி எனக்கு எப்படி சார் கிடைக்க முடியும்?'

விசும்பியபடியே கேட்டவனை மெல்ல அருகில் வந்து தோளைத் தொட்டு தட்டி தந்த ருத்ரா. 'போப்பா.. போய் அடுத்து ஆக வேண்டியதை பார்..என்றார். அப்படியே பலராமன் என்னும் பார்த்திபனின் தங்கை கணவன் பக்கம் திரும்பியவர் நாக்கை மடித்து கையை அசைத்து ஒரு சைகை செய்தார்.



"ஹலோ சார் என் வீட்டுக் காரர் ஆபீஸ்க்கு வந்துட்டாரா சார்?"

"தூங்கவே ஆரம்பிச்சிட் டார் மேடம்!"

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.

பலராமனுக்கா புரியாது..'சார் நான் இனி தண்ணி பக்கமே போக மாட்டேன் சார். அது மட்டும் இல்ல. தெருவுல தங்கமே கிடைத் தாலும் எடுக்க மாட்டேன் சார்' என்று பதறினான்!

ரிஜிஸ்தரார் ஆபீஸ்!

இரண்டு ஜோடிகளும் மாலை மாற்றிக் கொள்ள ஒருபக்கம் கோழிப் பண்ணை கூட் டம்-மறுபக்கம் ருத்ராவுடன் போலீஸ் கான்ஸ்டபிள் லாரன்ஸ்!

அவ்வளவு பேரும் இரண்டு ஜோடிகளையும் மனதார வாழ்த்தி முடித்தனர். வெளியே தேன் நில வுக் கார் மலர் அலங்காரத்தோடு காத்துக் கொண்டிருந்தது. அதில் ஏறப்போனவர்களை பலராமன் தடுத்தான். கூடவே கனகாவும் இருந்தாள். முதல் தடவையாக நிறைய நாட்களுக்கு பிறகு புன்னகையோட இருந்தாள்.

பலராமன் அந்த இரண்டு ஜோடிகளையும் தன்னோடு அழைத் துக் கொண்டு வீட்டுக்கு போனான்.

வீட்டில் வெங்கட கிருஷ்ணனின் அலங்கரிக்கப்பட்ட படம்-அருகில் அவர் மனைவி படம்!

'இரண்டு ஜோடிகளும் முதல்ல கும்பிட வேண்டியது. இவங்கள..அதுக்கு முந்தி நான் கும்புட்டடுக்கறேன் என்று விழுந்து எழுந்தான்.

பின் காரிலும் புறப்பட்டனர்.

மலர் அலங்காரத்துடன் கூடிய அந்த தேனி நிலவு. காருக்குள் இந்திரா பார்த்திபனிடம் கேட்டாள்.

'ஏங்க..உங்க தங்கச்சி புருஷன் எதுக்கு எங்க அப்பா படத்தை அவ்வளவு பயபக்தியா விழுந்து கும்பிட்டாரு..!'

திறு திறுவென்று பதில் கூற முடியாமல் விழித்தான்.

'ரொம்ப நல்லவர் போல.. அதான் எங்கப்பா அம்மாவை தன் அப்பா அம்மாவாவே நினைச்சுட்டார்...' என்று ஒரு பதிலை கூறி விட்டு திரும்ப அது தொடர்பாக பேச வாயைத் திறக்கவும் பாய்ந்து ஒரே அமுக்கு. அவள் உதடும், அவன் உதடும் இனி பேசக் கூடாது என்பது போல உரச ஆரம்பித்தன!

எப்பொழுதுமே திருத்தங்கள் தரும் தித்திப்பே ஒரு மாதிரி தான்.

**முற்றும்**



# தை

# மாதப் பலன்கள்

**அனுமத்தாசன்**

| | | | |
|---|---|---|---|
| | | | கேது |
| குரு | தை 2 மகர சுக்கிரன்<br>தை 20 மகர புதன் | | செவ் |
| சூரி | தை 25 கும்ப சுக்கிரன்<br>தை 30 கும்ப ரவி | | |
| சந் ராகு புத சுக் | | | சனி |



## மேஷம்

அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 -ம் பாதம்

தொழில் சம்பந்தமான முயற்சியில் அருமையான வெற்றியைப் பெறலாம். கூட்டுத் தொழில்- விறுவிறுப்பாக சென்று கொண்டிருப்பதால் வங்கியில் வாங்கிய கடனை அடைத்து விடலாம். நல்ல நண்பர்கள் கிடைப்பதால் மனதிற்கு உற்சாகமும் தெம்பும் கிடைக்கும். பயமில்லாமல் புதிய முயற்சியில் தைரியமாக இறங்கலாம். அரசியல், கலைத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு பரிசும், பாராட்டும் கிடைக்கலாம். வெளிநாட்டிற்குச் செல்ல வேண்டும் என்று ஆசைப்படுபவர்களுக்கு ஒரு அபூர்வமான வாய்ப்பு கிடைக்கும். இதை பயன்படுத்திக் கொள்வது மிகவும் நன்று.

பரிகாரம்: சுப்பிரமணிய கவசம் தினம் படிக்கலாம்